பக்கங்கள்: 24

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 15 ஞாயிற்றுக்கிழமை 29.01.2023 கதிர் 82

இனி இது ரகசியம் அல்ல!

ஜனநாயகத்தமிழ்த்தேசியக் கூட்டணி தனது தேர்தல் பரப்புரையை முழு வீச்சில் தொடங்கி விட்டது. தேர்தல் திகதி குறித்த அரச வர்த்தமானி அறிவித்தல் இன்னும்வெளிவராதநிலையில் நடக்குமோ நடக்காதோ ☞2





## ராஜபக்ஷக்களின் அக்கிரமங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் தீர்வு

### மக்கள் சந்திப்பில் சஜித் உறுதிமொழி

நாட்டை அழித்து மக்களை வதைத்து ராஜபக்சக்கள் செய்த மோசமான அக்கிரமங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நீதி கிடைக்கும் – தீர்வு கிடைக்கும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'தீர்வற்ற நாட்டுக்குத் தீர்வு' எனும் கருப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியால் ☞2

# 13ஐ இல்லாது ஒழிக்க இந்தியா ஒருபோதுமே அனுமதிக்காது

### உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்தினார் சம்பந்தன்

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது. அந்தச் சட்டத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும். இந்த நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். ☞2



## திருத்தம் 13 ஒரு சாபக்கேடு அதை ஒழிப்பதே ஒரே வழி

### நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என்கிறார் சரத் வீரசேகர



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிப் பதே ஒரே வழியாகும் என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

'13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண் டும். அப்படிச் ☞2

## பெப்ரவரி 6 இல் இலங்கை வருகின்றார் பான் கீ - மூன்



ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ – மூன் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் அழைப்பின் பேரில் இலங்கை வரும் பான் கீ – மூன், ☞2

## பரீட்சை மோசடிக்குத் துணை நின்ற இரு ஆசிரியர்களிற்கு கட்டாய ஓய்வு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.29

2021 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாண வன் விடை எழுத்துவதற்கு பரீட்சை மண்டபத்திற்கு வெளியே இருந்து உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் இடைநிறுத்தப்பட்டிருந்த ஆசிரியர்கள் இருவரையும் கட்டாய ஓய்வில் செல்வதற்குப் பணிக்கப்பட்டுள்ளது. ☞2

## சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட பாதுகாப்பு

### புலனாய்வுப் பிரிவினரும் களத்தில்



இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் முதலாம் திகதி முதல் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. ☞16

## அடித்து வட்டிப் பணம் வசூலித்த கூலிப்படை நபர்கள் 5 பேர் கைது

### கும்பலின் தலைவர் ஏற்கனவே விளக்கமறியலில்

வட்டிக்குக் கொடுத்த பணத்தை வசூலிக்கும் கூலிப் படையினராகச் செயற்பட்ட மேலும் 5 சந்தேகநபர்களை யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் கும்பலின் தலைவராகச் செயற்பட்டவரென் கூறப்படும் நபர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தால் அடுத்த மாதம் 10ஆம் திகதி ☞16

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்கிற சந்தேகம் இருந்தாலும், அதையெல்லாம் புறக்கணித்துவிட்டு பிரச்சாரத்தை முழு வீச்சில் தொடங்கிவிட்டார்கள்.

மன்னாரில் நடந்த முதலாவது வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் பேசிய கூட்டணியின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவர் விடாமல் தமிழ் அரசுக் கட்சிதான் கூட்டமைப்பை விட்டுப் பிரிந்து போய்விட்டது, ஒரு சிறு தேர்தலுக்காக இப்படிச் செய்து விட்டார்களே என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். அழாக்குறைதான்.

அந்தக் கூட்டத்திலும் சரி அதன் பின்னரும் சரி கூட்டணியின் ஒரே இலக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தனும் சுமந்திரனும்தான். அந்த இருவரையும் கூட்டத்தில் இருந்தவர்கள் தமது பேச்சுக்களில் ஒரு பிடி பிடித்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரிக்கும் சம்பந்தனுக்கும் வித்தியாசமில்லை என்று விளாசினார் கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினரான கோவிந்தம் கருணாகரம்.

கூட்டமைப்பிலிருந்து கட்சியையும் அதன் சின்னத்தையும் பிரித்துக் கொண்டு போனார்கள் என்கிற அடிப்படையில் அவர் அந்த ஒப்பீட்டைச் சொல்லியிருக்கக்கூடும். ஆனால், அவர் ஒன்றை மறந்துவிட்டார். கூட்டணியைப் (ஆயிரத்தெட்டுக் கூட்டணி இருக்கிறதால எந்தக் கூட்டணியைப் பற்றிப் பேசுகின்றேன் என்று வாசகர்கள் தலையைப் பிய்த்துக்கொண்டால் என்னைத் திட்டாதீர்கள். விரைவில் இந்தக் கூட்டணிகளுக்கெல்லாம் செல்லப் பெயர்கள் வைத்தால்தான் அடையாளப்படுத்துவது இலகுவாக இருக்கும்) பிரித்துக்கொண்டு சென்றபோது அதன் தலைவர் வீ.ஆனந்தசங்கரி. ஆனால் தமிழ் அரசுக் கட்சி பிரிந்து சென்றபோது அதன் தலைவர் சம்பந்தன் அல்லர். மாவை சேனாதிராசாதான் தலைவர்.

ஜனநாயகக் கூட்டணியின் தலைவர்கள் எவரும் மறந்தும்கூட மாவையின் பெயரை எங்கும் இழுக்கவில்லை. அது என்ன மந்திரமோ மாயமோ தெரியவில்லை, அவர்கள்தான் விளக்கிச் சொல்லவேண்டும். கட்சி எடுக்கும் முடிவுகள் எதற்கும் கட்சித் தலைவர் எந்த விதத்திலும் பொறுப்பில்லை என்று அவர்கள் கருதுகின்றார்களோ என்னவோ. அல்லது கட்சிக்குள் மாவையர் செல்வாக்கற்ற தலைவர், சுமந்திரனும் சம்பந்தனும்தான் கட்சியை கட்டி ஆழ்கிறார்கள் என்று கருதுகின்றனரோ தெரியவில்லை.

நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த செல்வம் அடைக்கலநாதன் சுமந்திரனை ஆமை என்று விழித்தார். ஆமை புகுந்த வீடு விளங்காது என்பதைப் போல கூட்டமைப்புக்குள் சுமந்திரன் புகுந்த பின்னர்தான் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் விலகினார் (இந்தக் கதை கஜேந்திரகுமாருக்கே தெரியுமோ தெரியாது. அவர் வேறு ஏதோ விளங்கங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார் தான் விலகிய தற்கான காரணமாக) பின்னர் பிரேமச்சந்திரன் விலகினார் என்றெல்லாம் கூறினார்.

இது வேடிக்கையாக இருந்தது. இந்த இயக்கத் தலைவர்களோடு ஒப்பிடும்போது தமிழர் அரசியலுக்கு நேற்று வந்தவர் சுமந்திரன். செல்வம், சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் இன்னபிற அவர்களின் கட்சி மூத்த உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் தமது இளம் வயது முதலே அரசியலில் இருப்பவர்கள். இயக்கங்களாக இருந்து ஒட்டுக் குழுக்களாக மாறி பின்னர் அரசியல் கட்சியாக பரிமாணமெடுத்ததுவரையான நீண்ட நெடிய அரசியல் அனுபவம் இவர்கள் எல்லோருக்கும் இருக்கிறது. அரசியலின் நெளிவு சுளிவு, சூதுவாது, ஆளுமை பற்றியெல்லாம் தெரியாமல் அறியாமல் அனுபவமில்லாமல் இன்றைய தலைமை நிலையை அவர்கள் அடைந்திருக்க வாய்ப்பில்லை.

அனுபவத்தாலும் களச்செயற்பாட்டாலும் சுமந்திரனைவிட பல மடங்கு முன்னால் இருக்கக்கூடியவர்களான இவர்கள் கூட்டமைப்பின் உடைவுக்கும் சிதைவுக்கும் காரணம் சுமந்திரன்தான் என்று இன்று கதை கூறுகின்றார்கள். அப்படியானால் சுமந்திரனின் அறிவுக்கும் ஆளுமைக்கும் முன்னால் தங்களது அரசியல் அறிவும் அனுபவமும் ஆளுமையும் போதாது என்று சொல்ல வருகின்றார்களா? இல்லையென்றால் கூட்டமைப்புக்குள் இருந்த நான்கு தலைவர்களான செல்வம், சுரேஸ், சித்தார்த்தன் மற்றும் மாவையர் சேர்ந்தும் கட்டுப்படுத்த முடியாத பெரும் ஆளுமையாகவா சுமந்திரன் இருந்தார்? சுமந்திரன் என்கிற தனி மனிதனிடம்கூடச் செல்வாக்குச் செலுத்த முடியாத அரசியல் ஆளுமையையும் தலைமைத்துவப் பண்பையும் அறிவையும் வைத்துக்கொண்டா பௌத்த சிங்கள பேரினவாதம் என்கிற கூர்மைமிகு பேராளுமையுடன் மோதி தமிழர்களுக்குத் தீர்வையும் விடிவையும் பெற்றுத் தரப்போகிறீர்கள்?

சுட்டுவிரலை மற்றவரை நோக்கி நீட்டும்போது மற்றைய நான்கு விரல்கள் உங்களைக் காட்டுகின்றன என்கிற மேற்கோளை என்றைக்கும் மறந்துவிடாதீர்கள். எல்லாப் பழிகளையும் சுமந்திரன், சம்பந்தன் மீது போட்டுவிட்டு நீங்கள் நல்லவர்களாகிவிடலாம் என்றும், நீங்கள் எல்லோரும் புனிதர்களாகிவிடலாம் என்றும் கற்பனை செய்யாதீர்கள். இனியாவது தமிழ் மக்களுக்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் அதை எப்படிச் செய்யப் போகிறீர்கள் என்பதைச் சொல்லி மக்களிடம் வாக்குக் கேட்கப் பாருங்கள். அடுத்தவரைக் குறை சொல்லிச் சொல்லி அல்லது மற்றவரின் பிழைகளைப் பிடித்துப் பிடித்தே நீங்கள் வெற்றியாளர்களாவதற்காக ஆடிய ஆட்டங்களை இயக்கங்களின் காலத்திலிருந்தே பார்த்துப்பார்த்துச் சலித்துப்போய்விட்டது.

- இடிமின்னல் -

## ராஜபக்ஷக்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெஹியத்தகண்டியில் நேற்று (27) ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொடர்ச்சியான மக்கள் சேவையை வழங்கும் பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரே நோக்கமாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியால் நியமனமாகும் சகல உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும் தனித்துவமான சட்ட ஒழுங்குமுறைகள் உள்ளன. அவற்றை மீறும் எந்தவொரு உறுப்பினருக்கும் தண்டனை பிறப்பிக்கப்படும். அவர்களுக்கு எதிராக தவறாது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வெளியேற்றப்படுவார்கள்.

எமது உறுப்பினர்களுக்கு ஒப்பந்தங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. பொதுமக்களின் சொத்துக்களுடன் விளையாடுவதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை. ஐக்கிய மக்கள் சக்தியால் விழுமியம் சார் உள்ளூராட்சி சபைகள் கட்டியெழுப்பப்படும்.

வரலாற்றில் எக்காலத்திலும் ராஜபக்ஷக்களை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது நானோ வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்யவில்லை; பிரசாரக் கூட்டங்களை நடத்தவும் இல்லை. நாட்டை அழித்து மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் எவராலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

நாம் ஆட்சிப்பீடம் ஏறினால் அரசியல்வாதிகள் உள்ளிட்ட நபர்களால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீட்பதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவோம். சர்வ கட்சிகள் அடங்கிய ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்போம் – என்றார்.

## 13ஐ இல்லாது ஒழிக்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அனுமதிக்க மாட்டோம் எனவும், அந்தச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் எனவும் இனவாதிகளான விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர கூறும் கருத்துக்களைக் குப்பையில் தூக்கி வீச வேண்டும். அவர்களின் விசமத்தனமான கருத்துக்கள் இப்போது வேகாது – என்றும் சம்பந்தன் பதிலடி கொடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை அண்மையில் இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்திவிட்டு சென்றுள்ளார். எம்முடன் ஜெய்சங்கர் நடத்திய பேச்சின் போதும் இந்தியாவின் நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்தார்.

ஜெய்சங்கரின் பயணத்தின் பின்னர் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டிய ஜனாதிபதி, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியுள்ளார். ஜனாதிபதி வாயால் மாத்திரம் கருத்துக்களை வெளியிடாமல் அதனைச் செயலிலும் காட்டவேண்டும் – என்றார்.

## திருத்தம் 13 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்யாமல் இருக்கவேண்டுமானால் யாராவது 22ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்யவேண்டும். இந்த இரண்டில் ஒன்று நடக்க வேண்டும் – என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் நடத்திய சர்வகட்சிக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பில் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட 'மொட்டு'வின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவிடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:-

13 ஆவது திருத்தம் இலங்கையின் அரசமைப்புக்கு ஒரு சாபக்கேடான சட்டமாகும். இந்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியது போல் அதை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தால் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். ஏனெனில் சிக்கலுக்குரிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிப்பதே ஒரே வழியாகும் – என்றார்.

## பெப்ரவரி 6 இல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலநிலை மாற்றம் மற்றும் நிலைப்பேர் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளார்.

தென் கொரிய அரசின் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் தலைவரான பான் கீ – மூன் காலநிலை மாற்றம் மற்றும் பசுமை அபிவிருத்தி திட்டங்களில் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயற்படவுள்ளதுடன் அவரது வருகையின் பின்னர் பல பசுமை பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் கைச் சாத்திடப்படவுள்ளன என்று காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேயவர்தன தெரிவித்தார்.

**யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை..**
என்ற தொடர் இன்றைய தினம் இடம்பெறவில்லை.
வழமைபோல் நாளை தொடக்கம் பிரசுரமாகும்




காலைக்கதிர் Kalaikkathir

**'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு -077 307 8799**

# கூடுதல் விலைக்கு முட்டை விற்றால் சட்டம் பாயும்




சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில் நுகர்வோர் விவகார அதிகார சபை கடந்த 20 ஆம் திகதி முட்டை விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது. அதன்படி வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாவாகவும் சிவப்பு முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபாவாகவும் காணப்பட்டது.

இருப்பினும் வர்த்தமானி அறிவித்தலையும் மீறி அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காண்பதற்கு நுகர்வோர் அதிகாரசபை அண் மையில் நாடாளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

அதன்படி தெஹிவளை பகுதியில் கட்டுப்பாட்டு விலையையும் மீறி அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த வர்த்தக நிலையத்திற்கு 5 லட்சம் ரூபா அபராதம் விதிக்க கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் கொழும்பு பிரதேசங்களுக்கு முட்டைகளைக் கொண்டு வந்து விநியோகிக்கும் பிரதான வர்த்தக நிறுவனத்துக்கும் மற்றும் நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் மொத்த மற்றும் சில்லறை முட்டைகளை விற்பனை செய்யும் கடையொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபா அபராதம் கொழும்பு நீதிவான் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ, நிச்சயம் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். நாங்கள் ஒரு நிறுவனத்திடம் அனுமதி பெற வேண்டும். எனினும் எங்களுக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. எதிர்வரும் நாள்களில் அனுமதி கிடைத்தால் முட்டையை இறக்குமதி செய்வோம். – என்றார்.









காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சுகாதார நெருக்கடியை தீர்க்க அவசர நடவடிக்கை தேவை

**பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையின் சுகாதாரத் துறையும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. உலக சுகாதார அமைப்பு இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றது. ஆனால் அது பற்றி யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதாக இல்லை.**

**சுகாதார நெருக்கடி என்பது பேரிடரை ஏற்படுத்தக்கூடியது. அதன் ஆபத்தை உணர்ந்து கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசரம் அவசியம். ஆனால் தேர்தல் களேபரங்களுக்குள் அந்த விடயம் அமுங்கிப் போய் விடுமோ என்கிற அச்சம் ஏற்படுகின்றது.**

**சுகாதார நெருக்கடி ஏற்பாட்டால் அதனால் பாதிக்கப்படுபவர்களாக முதலில் இருக்கப் போகிறவர்கள் ஏழைகள், வருமானம் குன்றியோர். அரச நிறுவனங்களின் மருத்துவத்தை நம்பியே இவர்கள் இத்தனை காலமும் வாழ்க்கையை நகர்த்தி வந்திருக்கிறார்கள். இலங்கை பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விடுபட்ட பின்னர் மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம் இலவசக் கல்வி மற்றும் மருத்துவம் மட்டுமே. இப்போது அதுவும் கேள்விக்குறியாகி இருப்பது எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிவிடும்.**

**இப்போதே அரச மருத்துவமனைகளில் சிகிச்சைகளுக்கான மருந்துகளைவெளியேவிலைக்கு வாங்கித் தரும்படி கேட்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. அறுவைச் சிகிச்சைக்கான ஊசிகள், மருந்துகள் உட்பட பலவற்றுக்கும் அரச மருத்துவமனைகளில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இருக்கும் மருந்துகளை வைத்துக்கொண்டு மருத்துவமனைகளும் எவ்வளவு காலத்திற்குத்தான் சமாளிக்க முடியும்?**

**இலங்கை எதிர்கொண்டுள்ள மருந்ததுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உலக சுகாதார அமைப்புத் தலையிடவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட கோரிக்கை மனுவுக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று சங்கத்தின் செயலாளர் தெரிவித்திருக்கிறார். இது நிலமையின் விபரீதத்தை உணர்த்துகின்றது.**

**இலங்கை மருந்துப் பொருட்களை இறக்குவதற்கு ஆண்டுக்கு 300 மில்லியன் டொலர் தேவை ஆனால், இலங்கைக்கு உதவும் நண்பர்கள் மூலமாக இதுவரையில் 80 மில்லியன் டொலர் மட்டுமே இதுவரையில் கிடைத்திருக்கின்றது என்கிறது உலக சுகாதார அமைப்பு. எஞ்சிய பணத்தைத் திரட்டுவதற்கான முயற்சிகளில் அரசின் முயற்சிகள் போதுமானவையாக இல்லையோ என்று தோன்றுகின்றது.**

**சுகாதார நெருக்கடியால் பேரிடர் ஒன்று ஏற்படுவதற்கு முன்பாக இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அனைத்துத் தரப்புக்களும்ஒன்றிணையவேண்டியது அவசியம். அரசு மட்டுமன்றி இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற்பட்டு விரைவில் போதிய மருந்துகள் அரச வைத்தியசாலைகளின் கையிருப்பில் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும்**

# சகோதரனுக்காக நாட்டின் அரசமைப்பையே மாற்றிய உலகில் ஒரே ஜனாதிபதி கோட்டா!

## உதய கம்மன்பில போட்டுத் தாக்கு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவை தீர்மானங்கள் ராஜபக்ஷ குடும்பத்தின் இரவு விருந்து உபசாரத்தின் ஊடாக எடுக்கப்பட்டது. ராஜபக்ஷ குடும்ப ஆதிக்கத்தால் 69 லட்ச மக்களின் அரசியல் தீர்மானம் சூன்யமானது. சகோதரனுக்காக நாட்டின் அரசமைப்பை மாற்றிய உலகில் ஒரே ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இடம் பிடித்துள்ளார் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை வெளியிடும் நிகழ்வு வெள்ளிக்கிழமை பத்தரமுல்ல பகுதியில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பல்வேறு நோக்கங்களுக்கு மத்தியில் நாட்டு மக்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர். 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷர்கள் தோல்வியடைவதற்கு குடும்ப ஆட்சி பிரதான காரணமாக அமைந்தது, ஆகவே 2019 ஆம் ஆண்டுக்கு பிறகு பாடம் கற்றுக்கொண்டிருப்பார்கள் என எதிர்பார்த்தோம். இருப்பினும் எமது நிலைப்பாடு இறுதியில் தவறானது.

2020 ஆம் ஆண்டுக்கு பின்னர் அமைச்சரவையில் ராஜபக்ஷர்கள் தான் அதிக ஆதிக்கம் கொண்டிருந்தார்கள். சிரேஷ்ட அமைச்சர்கள் ராஜபக்ஷர்களின் இளவரசரான நாமல் ராஜபக்ஷவிடம் ஆலோசனை பெற வேண்டிய சூழலை கோட்டாபய ராஜபக்ஷ ஏற்படுத்தினார்.

அமைச்சரவையில் பொருளாதார துறை சார் நிபுணர்கள் அங்கம் வகித்த போதும் நிதி நிலைமை தொடர்பில் அடிப்படை தகைமை கூட இல்லாத பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக நியமிக்கப்பட்டதுடன் 55 அரச திணைக்களங்கள் அனைத்தும் அவரது பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன.


ராஜபக்ஷர்கள் அமைச்சரவை முழுமையாக ஆக்கிரமித்தமை தொடர்பில் வாராந்தம் இடம் பெறும் கட்சி தலைவர் கூட்டம் இரத்து செய்யப்பட்டது. அமைச்சரவை கூட்டம் ராஜபக்ஷர்களின் குடும்ப உறுப்பினர்களின் இரவு விருந்து உபசாரத்தின் ஊடாக எடுக்கப்பட்டது.

தவறான பொருளாதார தீர்மானங்கள் முழு நாட்டையும் சீரழிக்கும் என நாங்கள் எடுத்துரைத்ததைத் தொடர்ந்து நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனது சகோதரரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முறையிட்டார். சகோதரரின் தவறான ஆலோசனைகளை கேட்டு கோட்டாபய ராஜபக்ஷ எங்களை பதவி நீக்கினார். எம்மை பதவி நீக்கி விட்டு மூன்று மாதத்துக்குப் பின்னர் நாட்டை விட்டு தப்பிச் செல்லும் நிலை அவருக்கு ஏற்பட்டது.

ராஜபக்ஷர்களின் குடும்ப ஆதிக்கத்தால் 69 லட்சம் மக்களின் அரசியல் தீர்மானம் சூன்யமாக்கப்பட்டது. போராட்டத்தின் ஊடாக ராஜபக்ஷர்களை மக்கள் புறக்கணித்தார்கள், ஆனால் ராஜபக்ஷர்களை பாதுகாக்கும் வகையில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

ராஜபக்ஷர்களின் தவறான பொருளாதார கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுகிறார். மக்கள் படும் துயரத்தை அவர் கண்டு கொள்ளவில்லை,ஏனெனில் அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் அல்லர், தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைய நேரிடும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்கு அறிவார். அதனால் தான் தேர்தலை பிற்போட சூழ்ச்சி செய்கிறார். கௌரவமான முறையில் செயற்பட்டால் இறுதி காலத்தை கௌரவமாகக் கழிக்கலாம். – என்றார்.

# இலங்கையில் முதலிட சவூதிக்கு அழைப்பு!



இலங்கையில் பல்வேறு துறைகளில், குறிப்பாக கொழும்பு துறைமுகநகரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவலு உற்பத்தி ஆகியவற்றில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் ஃபர்ஹான் அல் சௌத்திடம் அழைப்பு விடுத்துள்ளார்.

சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் அல் சௌதின் அழைப்பின்பேரில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை சவுதி அரேபியாவிற்குச் சென்ற வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கடந்த வெள்ளிக்கிழமை வரை அங்கு தங்கியிருந்து பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை முன்னெடுத்திருந்தார்.

இந்தச் சந்திப்புக்களின்போது இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நல்லுறவு தொடர்பாகத் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அமைச்சர் அலி சப்ரி, சர்வதேசக் கட்டமைப்புக்களில் குறிப்பாக 2009, 2012, 2014 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு சவூதி அரேபியா அளித்த ஆதரவிற்கும் நன்றி கூறினார். அதேபோன்று இலங்கையின் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக சவூதி அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக வழங்கப்பட்ட நிதியுதவி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியளிப்பு வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு வழங்கிய ஆதரவு ஆகியவற்றுக்கும் அமைச்சர் அலி சப்ரி தனது நன்றியை வெளிப்படுத்தினார்.

அதேபோன்று இலங்கையின் பல்வேறு துறைகளில், குறிப்பாக கொழும்பு துறைமுக நகரத்திலும் புதுப்பிக்கத்தக்க சக்திவலு உற்பத்தியிலும் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் அலி சப்ரி சவூதி அரேபிய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

அதற்குப் பதிலளித்த சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர், இலங்கையும் சவூதி அரேபியாவும் உண்மையான நண்பர்கள் என்று குறிப்பிட்டதுடன், பல்வேறு சர்வதேச விவகாரங்களில் இருநாடுகளும் ஒரேவிதமான நிலைப்பாட்டைப் பின்பற்றுவதாக சுட்டிக்காட்டினார். அத்தோடு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு தாம் சவூதி அரேபியாவில் இயங்கும் வணிகங்களை ஊக்குவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பாகக் கருத்து வெளியிட்ட சவூதி வெளிவிவகார அமைச்சர் ஃபர்ஹான் அல் சொளத், இப்போது இந்த விடயத்தில் இலங்கை அதன் நட்புநாடுகளிடமிருந்து நேர்மறையான பதிலைப் பெற்றுவருவது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்தார்.

# மட்டு கரடியனாற்றில் 16 மாடுகள் கடத்தல்!

## மாட்டுகன்று எரிந்த நிலையில் மீட்பு



மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள காருமலை பிரதேச மாட்டுபட்டியில் இருந்த 47 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 16 எருமை மாடுகளை கால்நடையாக கடத்தி சென்று விற்பனை செய்த இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்ததுடன் தோல் கம்பனியில் எரிக்கப்பட்ட நிலையில் மாட்டுக்கன்றுகளை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21 ஆம் திகதி கன்றுதாச்சியான மாடுகள் உட்பட 16 மாடுகள் காணாமல் போனதைத் தொடர்ந்து அதனை தேடிய நிலையில் கரடியனாறு செங்கலடி பிரதான வீதியில் உள்ள வீடுகளில் அமைக்கப்பட்டிருந்த சிசிரி கமெராக்களை சோதனையிட்டபொது மாடுகளை இருவர் கால்நடையாக கடத்திச் செல்லும் காணொளி பதிவாகியுள்ளதையடுத்து மாடுகடத்தும் குழுவைச் சேர்ந்த கித்துள் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்தவரிடம் மேற்கொண்ட விசாரணையில் கடத்திச் சென்ற மாடுகளை ஏறாவூர் தளவாயிலுள்ள தோல் பதனிடும் கம்பனியிடம் விற்பனை செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதனையடுத்து, பொலிஸார் அந்த கம்பனியை சுற்றிவளைத்த போது கடத்தப்பட்ட மாடுகளை வெட்டி இறைச்சி விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், வெட்டப்பட்ட கன்றுதாச்சி மாடுகளின் வயிற்றில் இருந்த கன்றுகள் அந்த பகுதி நிலத்தில் எரியூட்டப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

தோல் கம்பனி உரிமையாளர் மற்றும் மாடு கடத்தலில் ஈடுபட்ட கித்துள் பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் தலைமறைவாகியுள்ளனர் எனவும் நீண்ட காலமாக கரடியனாறு பகுதியில் மாடு மற்றும் ஆடு கடத்தலில் குழு ஒன்று இயங்கிவந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கரடியனாறு பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை 8 மாடுகளை காணவில்லை என அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாய்ப்பால் புரைக்கேறி சிசு இறப்பு

யாழில் தாய்ப்பால் புரைக்கேறி 30 நாள்களேயான குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

புத்தூர் நவக்கிரி, மாதா கோவிலடியை சேர்ந்த ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

தாயிடம் பாலருந்திய போது திடீரென புரைக்கேரியது இதனை அடுத்து அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது குழந்தை உயிழுந்துள்ளது.

குழந்தையின் உடல் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று (சனிக்கிழமை) 31 ஆம் நாள் நிகழ்வுகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்த வேளையில் குழந்தையின் இறப்புச் சம்பவம் அவர்களது குடும்பத்தை பாரிய சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# கொழும்பில் மின் தாக்கி படைச் சிப்பாய் இறப்பு

கொழும்பு, மட்டக்குளி பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்தார். இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மட்டக்குளி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட காக்கை தீவு பிரதேசத்தில் காணப்படும் இராணுவ முகாமில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு கொண்டிருந்த போது மின்கம்பியை இழுக்க முயன்ற போது இவ்வாறு மின்தாக்கி உயிரிழந்துள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 38 வயதுடைய ஹேகித்த, வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவராவார்.

மட்டக்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஹெரோயினுடன் 3 பேர் கைது! நுகேகொடையில் சம்பவம்

நுகேகொடை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நுகேகொடை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக நுகேகொடை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஓட்டோ ஒன்றில் இருந்து 12 கிராம் 880 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டு நுகேகொடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது 10 கிராம் 870 மில்லிகிராம் மற்றும் 10 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் உடகமுல்ல மற்றும் நுகேகொடை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 22, 34 மற்றும் 55 வயதுடைய மஹரகம மற்றும் நுகேகொடை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.







OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM PER CHARGE*
FAAST-F2T
80-85 KM PER CHARGE*
FREEDOM
70-75 KM PER CHARGE*
Rs.550,000/- Upwards
Available Colors :
conditions apply*
India's fastest growing EV brand
2 YEARS WARRANTY*
3 FREE SERVICE*
*Range varies from mode to mode selected.
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
# துணைவேந்தர் பதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள்/பெயர்மொழிவுகளுக்காக அழைப்பு விடுகின்றது. பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி/பெயர் மொழி யப்பட்டவர் இலங்கைப் பிரஷ்ஜயாகவும் 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி/ பெயர் மொழி யப்பட்டவர் நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின் றதோ அது வரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி, புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல் கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் எட்டு பீடங்களையும் கிளிநொச்சியில் மூன்று பீடங்களையும் (எல்லாமாக 11 பீடங்களை) கொண்டமைந்து ஏறத்தாழ பதினோரா யிரத்து அறுநூறு பட்டதாரி மாணவர்களையும் அறுநூறு உயர் பட்டதாரி மாணவர் களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக் கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக் கைகளுக்கு வலுவூட்டித் துணை புரியமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற் றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்கு களை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங் காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங் கலாக அவரது தலைமைத்துவம் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமி யங்ளைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்ப தாரி/பெயர் மொழியப்பட்டவர் கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமை யான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித் துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர் பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற் திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதி யும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல் கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதி த்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந் தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல்இ ஆற்றொழுக் கான வகையில் அமையுமாறு மேலாண்;மைக்கான கொள்கைகளை உருவாக்கு தல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மா னங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்ப வற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்பு நிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப் பும் துணைவேந்தருக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையது மான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக் கொண்ட காரியத்தின் தஷ்மை யைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத் திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

**விண்ணப்பங்கள் / பெயர் மொழிவுகளுடன் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.**

1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.

2. விண்ணப்பதாரி / பெயர் மொழியப்பட்டவர் பல்கலைக்கழக அபிவிருத் திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.

3. தற்போது இப் பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவராயின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட் டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையில் அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.

4. பெயர் மொழிவுகளாயின் பெயர் மொழியப்பட்டவரின் இணக்கக் கடிதம்.

5. விண்ணப்பதாரி / பெயர் மொழியப்பட்டவர் அரச பொதுத்துறை, கூட்டுத்தா பனங்கள், நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள், பெயர் மொழிவுகள் **'பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்'** என முகவரியிட்டு மூடிய கடித உறையில் **01.03.2023** அன்று பி.ப **3.00** மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'துணைவேந்தர் பதவி'** எனக் குறித்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் / பெயர்மொழிவுகளுக்கான முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டுக் குழுவின் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் எண் 02/2020 சுற்றறிக்கையில் எடுத் துக்கூறப்பட்ட கட்டமைப்பு அம்சங்களுக்கேற்ப நடாத்தப்பெறும். இந்நோக்கத் திற்காக நியமிக்கப்பட்ட இம்மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத்திற்கு வேட்பாளர் அழைக் கப்படுவார். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் **https://www.ugc.ac.lk/en/policy/commission-circulars/176-circulars-published-in-2020-012020-and-above/2198-commission-circular-no-022020-appoinment-to-the-post-of-vice-chancellor.html** இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தவிர்க்கமுடியாத சூழ்நிலையொன்றில் வேட்பாளர் ஒரு வர் மதிப்பீட்டுக் குழுவின் முன் சமுகமளிக்க முடியாது போகும் வேளையில் அவர் காணொளி மாநாடு **(video conference)** ஊடாக சமுகமளிக்க அனுமதிக்கப்படலாம்.

பல்கலைக்கழக பேரவையின் விசேட கூட்டமொன்று, மூன்று பெயர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விதந்துரைப்பதற்காக, மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத் திகதியன்றே கூட்டப்படும்.

மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு நிரைப்படுத்தி சுருக்கிய பேரவையினால் ஒப்புதல் அளிக்கப்பெற்ற பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் அப்பேரவைக் கூட்டத் திற்கு ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த்துவதற்கு அழைக்கப்படுவர். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போதோ மதிப்பீட்டின் போதோ பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். தவிர்க்கமுடியாத சூழ்நிலை யொன்றில் வேட்பாளர் ஒருவர் பேரவையின் விசேட கூட்டத்தின் முன் சமுகம் அளிக்க முடியாது போகும் வேளையில் அவர் காணொளி மாநாடு **(video conference)** ஊடாக சமுகமளிக்க அனுமதிக்கப்படலாம்.

விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 02/2020 இன் படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார்செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக் காக முன்வைக்கப்படும்.

முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படா.

**விசுவநாதன் காண்டீபன்**
**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்**
**பதிவாளர் அலுவலகம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**
**27.01.2023**

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I | English for all | Sunday the 29th of January 2023



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com


## *Read the following passage and Answer: the question that follows.*

Even as a child, Dr William Tan refused to be the victim. He was struck by polio when he was two and could not walk or run. In kindergarten, the bullies started hitting him. "They were very nasty to me. They would hit me on the head and run away. And I couldn't go after them," he recalled.

Dr Tan's make–the–most–of–what–you–have attitude explains why he is what he is today: a doctor, a neuroscientist, a Frulbright scholar, a Raffles scholar and also the first paraplegic to complete 10 marathons in 7 continents in 70 days.

This latest feat – which he is submitting to the Guinness World Records for consideration – is all the more amazing since he travelled alone, often staying in small travel lodges without facilities for the disabled. There were obstacles aplenty. In Antartica, he got stuck in mud; in Arizona, he neary broke his hand when it got caught in the wheel; in Amsterdam, he injured his right chest going over cobblestone; and in Bangkok, he nearly missed the start due to traffic jam.

Dr Tan said candidly, "There were moments when I thought of giving up because it was too tough. And then other things came to my mind. I had trained very hard for each race – 450 push ups a day, going to the gymna sium – there was too much to lose." Another thought kept him going, "I recalled that I started this challenge to raise money for cancer." In 1980, he became the first Singaporean to complete a Marathon in a wheelchair. Since then, he has been in many marathons, won nunmerous medals and raised $14 million for charity.

He became a wheelchair athelete only in the late 1970s after meeting with Mr Wahid Baba, an ex–police officer who pioneered wheelchair sports in Singapore. "That opened a whole new horizon in my life. I loved it. I loved having to push and push and push," Dr Tan said. Still, the marathon veteran admits his latest feat is the toughest thing he has ever done. "Previously, I was able to pick which marathons I wanted to do, but for the world record attempt, I just had to take whichever fit into my schedule," he said.

He is also keeping mum about his next world record attempt next month. "If I announce it, someone in the United States or United Kingdom might do it next week and then it will be gone."

***Answer the following questions based on the reading passage.***

1. What did the bullies do to Dr William Tan when he was in kin dergarten

---------------------------------------------------------------------------

2. What made Dr William Tan's latest feat the toughest?

---------------------------------------------------------------------------

3. How does Dr William Tan prepare himself before every marathon?

---------------------------------------------------------------------------

4. Which word in the passage aptly describes Dr William Tan as an experienced marathon paraplegic?

---------------------------------------------------------------------------

5. Would you consider Dr William Tan an outstanding sportsman? State one reason to support your answer.

---------------------------------------------------------------------------



Each year, between May and September, more than a thousand leatherback turtles make the arduous journey across the Pacific to lay their eggs along the stretch of beach near Kuala Trengganu at the Malaysia. Throngs of tourists make a pilgrimage there to witness this awesome ritual.

In the murkiness of midnight, people huddle together on the coold sand. They speak in whispers. Suddenly, their guide raises a hand and everyone understands the cue. In total silence, they wait and when he points in a direction, their gazes follow. About a hundred metres away from the congregation, in the dim light of half moon, a massive form emerges from the water and lurches across the sand. With monumental effort, the creature heaves itself up towards the dunes, halthing now and then in exhaustion. Then, twenty metres away from them, the plodding thumps cease.

The creature is a giant leatherback turtle, drawn by some strange instinct to deposit her eggs along this particular stretch of beach. She emerges from the sea, nervous and excitable. She is now wholly engrossed in the preparation. She sweeps the sand with her powerful front flippers. Then she positions her tail over the narrow crevice and begins to lay her eggs. People touch the smooth black skin and children pose for pictures on her back. Oblivious to all these, the creature continues depositing her eggs while her eyes stream with tears. The leatherback is becoming an endangered species.

Sea creatures pose danger to the population. Some of the hatchlings fall prey to them but humans are deadlier. With them, the eggs do not even get to become hatchlings. It is not unheard of to have an entire nest wiped out of its eggs. At Pantai Penyu (Turtle Beach) the Malaysian government maintains a hatchery to protect them. A quota system limits the number of eggs which local residents may collect. The rest are guarded at the hatchery until they become hatchlings and are ready to return to where they belong. The giant leatherback is still dropping eggs into the hole.

Two employees of the hatchery now join the circle of tourists. When the great creature has deposited the last of her ninety-odd eggs, she lunges aside, covering the hole with a few scoops of sand. Then she turns towards the water and labours once again across the sand in agonizing thrists. The crowd trails her to ther surf while the two men start work. Then, the leatherback, regaining her grace, disappears into the water.

***Answer the following questions based on the reading passage.***

1. Who are the people who "huddle" (line 5) together?

---------------------------------------------------------------------------

2. In the sentence "Suddenly, their guide raises a hand and every one understands the cue" (line 6 – 7), what do they understand?

---------------------------------------------------------------------------

3. What does the phrase "with monumental effort" (line 11) tell you about the way the turtle moves along the sand.

---------------------------------------------------------------------------

4. Does the author know why the turtles choose to lay their eggs along the beach at Kuala Trengganu? Which phrase tells you that?

---------------------------------------------------------------------------



# Tribute to a Banker

Kandiah Pathmanesan passed away in the early hours of Friday, 16th December, 2022 at the age of 74 after a short illness.

Pathmanesan, who was born in Jaffna in 1948, spent most of his childhood and teenage years in Jaffna, attending St. Patric's College, Jaffna. He holds a Bachelor's degree in Commerce.

I write this brief tribute with a sense of sadness. I have known Pathmanesan since the year 1972 through a friend of mine E.S.Sellakumar, who has since migrated to Canada. Our friendship lasted for almost five decades until his unfortunate demise.

He was a member of the Editorial Committee of "Eternal Banker" - Journal published by Bank of Ceylon Pensioners' Association – Jaffna District, since the year 2012 to date of his death. As a member of the Editorial Committee, I am aware that he edited several articles thus speeding up the proofing process and minimizing typesetting errors.

He was an active member of the Alliance Francaise de Jaffna – an organisation mainly conducting French classes for teens and adults. He enjoyed spending time with nature and one popular activity was feeding wild birds. He used to send birthday wishes to his relatives, friends and birthday reminders to his contemporaries alike.

Mr.Pathmanesan was greatly supported by his wife Sivaneswary, daughter Kowsalya and son Muhunthan. Though he is no more, he will live in the hearts of all people who knew him.

May his soul attain Moksha.

K.Ulaganathan,
Past President,
Bank of Ceylon Pensioners' Association – Jaffna District.

## *Read the following passage and Answer: the question that follows.*



He drank. When he could not drink anymore, they forced his mouth and stuck the tube in it, and he was forced to drink or drown. He could hear the cries of a man and the screams of another man nearby. He himself could not scream. He writhed in pain and thought he would explode. Blacking out was the best thing he could do. My family was silent after my uncle spoke. I remembered my uncle before he was taken away. A well–built man with a big hug and hearty laugh, he was an amateur pilot and loved to play with radios. I was told that was a crime to the Japanese and so he was taken away. He survived one and a half months in torture, but it left its terrible scar on him.

I went forward and held his calloused hand. My uncle has large hands– he was a very good tennis player– these hands now shook even as he held a glass of water. His once smiley face had aged ten years. And again, i caught him staring at nothing. As my mother pulled me back beside her, a thought occured to me. "Is making toys a crime?" I whispered to mother. We has no toys to play with, and i made my own out of yellow mud near our house. "Shush," Mother said. "Do you really want to stay in Singapore?" my uncle asked Father. You're a wanted man.

It's very dangerous here for you and your family. Once they get word that the legal adviser to the Chinese government is here, they'd come and get you." "I know," said Father. "But we have decided to stay. Gary needs treatment. We cannot go." A month ago, Father told my sister, two brothers and I that we were going on a cruise to India or Australia. That was before the Japanese came. Then my eldest brother broke his leg in a cycling accident.

"Don't worry about us," said Father. "We were never removed from the ship's passenger list. On record we're on board the ship towards India. The chief clerk to the Kempeitai (Secret Police) is a friend of mine and he has shown them that we'd left the country and got my name deleted from the wanted list. The Japanese thinks we've left Singapore." "But if someone knew about you and went to them…" My uncle faltered. "In fact, someone does know. I've paid him his price." "It'd never stop! You'd be found out!" my uncle grasped Father's arm.

***Answer the following questions based on the reading passage.***

1. Who are "they' in paragraph one?

-----------------------------------------------------------------------

2. Which phrase in paragraph one has the same meaning as losing consciousness?

-----------------------------------------------------------------------

3. Why was the author's uncle arrested?

-----------------------------------------------------------------------

4. What does "it" in paragraph 3 refer to?

-----------------------------------------------------------------------

5. How do we know that the torture had greatly weakened the author's uncle?

-----------------------------------------------------------------------





# ஆடிக் குடத்தடையும் - பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடைப் பாடல்

**ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்**
**மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை**
**பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்**
**உற்றிடுபாம் பெள்ளனவே யோது.**

- காளமேகப் புலவர்

மேற்போக்கான சொல்லமைப்பிலே ஒன்றாகவும், ஆராய்ந்து பார்த்தால் இரு பொருள்படும்படியும் அமைந்துள்ள பாடல் சிலேடைப்பாடல் எனப்படும். இதற்கு இரட்டுற மொழிதல் என்றும் பெயர். செய்யுளில் வரும் சொற்களை நன்றாக ஆராய்ந்து பொருள்நயத்தை உணர வேண்டும்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள காளமேகப்புலவரின் இப்பாடல், ஒரே பாடலாக இருப்பினும், நன்கு ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொரு சொல்லும் பாம்புக்கும் எள்ளுக்கும் பொருத்தமானதாக அமைகிறது. அதாவது, பாம்பைப் பற்றி விளக்குவது போல் அமைந்த இதேபாடல், எள்ளைப் பற்றி விளக்குவதாகவும் அமைகிறது.

புலியூர்க் கேசிகன் உரை

ஆடிக்குடத்து அடையும் - பாம்பு, படமெடுத்து ஆடியபின் குடத்திலே சென்று அடைந்திருக்கும்.

ஆடும்போதே இரையும் - ஆடுகின்ற போதிலே, சீத்துப் பூத்தென்று இரைச்சலிடும்.



மூடித்திறக்கின் முகம்காட்டும்- குடத்தை மூடித்திறந்தால், தன் தலையை வெளியே உயர்த்திக்காட்டும்.

ஓடி மண்டை பற்றில் பரபரெனும் - விரைந்து அதன் தலையைப் பற்றிக் கொண்டால், பரபரென்று சுற்றிக்கொள்ளும்.



பாரிற் பிண்ணாக்கும் உண்டாம் - உலகிற் பிளவுபட்ட நாக்கும் அதற்கு உண்டாம்.

பாம்பு, படமெடுத்து ஆடியபின் குடத்திலே சென்று அடைந்திருக்கும்; ஆடுகின்ற போதிலே, சீத்துப் பூத்தென்று இரைச்சலிடும்; குடத்தை மூடித்திறந்தால், தன் தலையை வெளியே உயர்த்திக்காட்டும்; விரைந்து அதன் தலையைப் பற்றிக் கொண்டால், பரபரென்று சுற்றிக்கொள்ளும். உலகிற் பிளவுபட்ட நாக்கும் அதற்கு உண்டாம்.

ஆடிக்குடத்து அடையும் - செக்கிலே ஆடி, எண்ணெயாகிக் குடத்திலே அடைந்திருக்கும்.

ஆடும்போதே இரையும் - செக்கிலே ஆடும்பொழுதிலேயே இரைச்சல் செய்யும்.

மூடித்திறக்கின் முகம் காட்டும் - குடத்து எண்ணெயை மூடி வைத்திருந்து பின் திறந்து பார்த்தால், பார்ப்பவரின் முகத்தைத் தெளிவாகக் காட்டும்.

ஓடி மண்டை பற்றில் பரபரெனும் - விரைய மண்டையிலேயே தேய்த்துக் கொண்டால், பரபரவெனக் குளிர்ச்சி உண்டாக்கும்.

பாரிற் பிண்ணாக்கும் உண்டாம் - உலகிலே பிண்ணாக்கும் அதனிடத்தே உண்டாகும்.




உற்றிடு பாம்பு எள்ளனவே ஒது - (இதனால்) அடைந்திடும் பாம்பும் எள்ளும் சமமாகும் என்று சொல்லுக.

செக்கிலே ஆடி, எண்ணெயாகிக் குடத்திலே அடைந்திருக்கும்; செக்கிலே ஆடும் பொழுதிலேயே இரைச்சல் செய்யும்; விரைய மண்டையிலேயே தேய்த்துக் கொண்டால், பரபரவெனக் குளிர்ச்சி உண்டாக்கும்; உலகிலே பிண்ணாக்கும் அதனிடத்தே உண்டாகும்; (இதனால்) அடைந்திடும் பாம்பும் எள்ளும் சமமாகும் என்று சொல்லுக.

## உலகின் முதல் கோயில்...!

துருக்கியில் அமைந்துள்ள இந்த கோவில் கி.மு. 8000 காலக்கட்டத்தை சேர்ந்ததாக இருக்கலாம் என்று அகழ்வ ராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இங்கு காணப்படும் சிற்பங்களில் வேட்டையாடும் வழிமுறைகள் வடிக்கப்பட்டுள்ளன.



இந்த மலை கஹ்தாவிற்கு வடக்கே 40 கிமீ (25 மைல்) தொலைவில் உள்ளது.



இந்த சிலைகள் ஒரு காலத்தில் அமர்ந்திருந்தன, அவற்றில் ஒவ்வொரு கடவுளின் பெயர்களும் பொறிக்கப்பட்டன.

சில கட்டங்களின் சிலைகளின் தலைகள் அவற்றின் உடலில் இருந்து அகற்றப்பட்டு,

இப்போது அவை தளம் முழுவதும் சிதறிக்கிடக்கின்றன.



# கல்விக்கதிர்

- அகரன் -

## பத்திரிக்கை உலக ஜாம்பவான் யார்.. ?



பத்திரிக்கை உலக ஜாம்பவான் மற்றும் விடு

தலைப்போராட்ட வீரரான ஏ.என்.சிவராமன் 1904ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் தேதி கேரள மாநிலம் கொச்சினில் பிறந்தார்.

தினமணி நாளிதழில் 43 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய அரும்பெரும் சாதனையாளர்.

இவர் கல்லூரியில் படித்தப்போது ஒத்துழையாமை இயக்கத்துக்காக காந்திஜி அழைத்தார். எனவே படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார்.


காந்திஜியின் 'ஹரிஜன்' இதழின் தமிழ் பதிப்பாசிரியராகப் பணியாற்றினார்.

கணக்கன், ஒண்ணேகால் ஏக்கர் பேர்வழி, குமாஸ்தா, அரைகுறை வேதியன், அரைகுறை பாமரன் ஆகிய புனைப்பெயர்களில் ஆயிரக்கணக்கான கட்டுரைகள் எழுதினார்.

பத்மஸ்ரீ, பத்ம பூஷண் விருதுகள் பெறும் வாய்ப்பு தேடிவந்தபோதும் ஏற்க மறுத்துவிட்டார். விடுதலைப் போராட்டத்தில் இவரது பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் மத்திய அரசு வழங்கிய தாமிரப் பட்டயத்தை ஏற்றார்.

தமிழ் பத்திரிக்கை உலகில் பல்வேறு சாதனைகளைப் படைத்தவரும், 'ஏஎன்எஸ்' என்று அன்போடு அழைக்கப்பட்டவருமான ஏ.என்.சிவராமன் தனது பிறந்தநாளன்றே 97வது வயதில் (2001) மறைந்தார்.

## ஒருவர் மீது கோபம் கொள்ள சூழ்நிலையே காரணம்!



கோபம் வந்தால் வெற்று படகாய் மாறு
நீ படகில் சென்று கொண்டிருக்கிறாய்.
எதிரே மற்றொரு படகில் வந்து மோதும் போது அவர் மேல் கோபப்படுகிறாய்.
ஏனெனில் கோபம் கொள்ள ஒரு நபர் இருக்கிறார்.
அதுவே ஒரு காலியான படகு மோதும் போது சூழ்நிலையை சரிசெய்கிறாய்.
அதன்மீது கோபப்பட மாட்டாய்.
ஏனெனில் அங்கே கோபம் கொள்ள நபர் யாரும் இல்லை.
வெறுமையே உள்ளது.
நீ வெறுமையாக இருக்கும்போது
உன்மேல் யாராலும் கோபப்பட முடியாது.
அது உன்னையும் தாக்காது.
வெற்றுப்படகாய் மாறிவிடு

- ஓஷோ.



குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# சிறுவர் கதிர்





## நீர் இறைத்த திருடர்கள்

ஒரு சமயம் விஜயநகர ராஜ்யத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. பருவ மழை தவறி விட்டதால் குளம், குட்டை, ஏரி எல்லாம் வற்றிவிட்டது. தெனாலிராமன் வீட்டுக் கிணற்றிலும் நீர் குறைந்து அதிக ஆழத்திற்குப் போய்விட்டது. இதனால் தினமும் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச மிகவும் சிரமப்பட்டான் தெனாலிராமன்.

இந்த சமயத்தில் ஒரு நாள் இரவு நான்கு திருடர்கள் தன் தோட்டத்தில் பதுங்கி இருப்பதைக் கண்டான். உடனே வீட்டிற்கு வந்து தன் மனைவியிடம், "அடியே, நம் நாட்டில் பருவ மழை தவறிவிட்டதால், பஞ்சம் ஏற்பட்டு விட்டது. எனவே நிறைய திருட்டு நடக்க ஆரம்பித்து விட்டது. பஞ்ச காலம் முடியும் வரை நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எனவே நாம் ஒரு காரியம் செய்வோம்" என்று வெளியே பதுங்கியிருந்த திருடர்களுக்கு கேட்கும் வண்ணம் உரத்த குரலில் பேசினான்.

"அதற்கு என்ன செய்யலாம்?" என்று தெனாலிராமனின் மனைவி கேட்டாள்.

"வீட்டிலுள்ள நகை, மற்றும் விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் இந்தப் பெட்டியில் போட்டு பூட்டு. நாம் இந்தப் பெட்டியை யாருக்கும் தெரியாமல் கிணற்றில் போட்டு விடலாம். பஞ்சம் தீர்ந்து திருட்டுப் பயம் ஒழிந்ததும் மீண்டும் கிணற்றிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்" என்று முன்போலவே உரக்கக் கூறினான் தெனாலிராமன். திருடர்களும் இதைக் கேட்டனர்.

அதே சமயம் ரகசியமாக தெனாலிராமன் தன் மனைவியிடம் திருடர்கள் ஒளிந்திருப்பதைக் கூறி ஒரு பழைய பெட்டியில் கல், மண், பழைய பொருட்களை எல்லாம் போட்டு மூடினான். அந்தப் பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கி வந்து கிணற்றுக்குள் 'தொப்'பென்று போட்டு விட்டு வீட்டுக்கு திரும்பிவிட்டான் தெனாலிராமன்.

திருடர்களும், "தெனாலிராமன், வீட்டிற்குள் புகுந்து திருடும் நம் வேலையை சுலபமாக்கிவிட்டான். நாம் எளிதாக கிணற்றிலிருந்து பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்'' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

பெட்டியை எடுக்க கிணற்றுக்கு அருகே வந்தனர் திருடர்கள். கிணறு ஆழமாக இருந்ததால் உள்ளே இறங்கப் பயந்த திருடன் ஒருவன், "அண்ணே! தண்ணீர் குறைவாகத்தான் உள்ளது. நாம் நால்வரும் ஏற்றம் மூலம் மாற்றி மாற்றி நீரை இறைத்து விட்டால் சுலபமாகப் பெட்டியை எடுத்துக் கொண்டு போகலாம்" என்று கூறினான். அதைக்கேட்ட மற்றவர்களும் அவன் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டனர். அதன்படி ஒருவர் மாற்றி ஒருவர் ஏற்றம் மூலம் நீர் இறைக்கத் தொடங்கினர்.

சற்று நேரம் கழித்து வேறு வழியாக தோட்டத்திற்கு சென்ற தெனாலிராமன், திருடர்கள் இறைத்து ஊற்றிய நீரை தன் தோட்டத்தில் உள்ள செடிகளுக்கும், கொடிகளுக்கும், பயிர்களுக்கும் பாயுமாறு கால்வாயைத் திருப்பி விட்டான்.

இப்படியே பொழுது விடிந்தது விட்டது. ஆனால் கிணற்றில் தண்ணீர் குறையவில்லை. இதனால் திருடர்களும், "நாளை இரவு மீண்டும் வந்து நீரை இறைத்து விட்டு பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்று பேசிக் கொண்டு சென்றனர்.

அப்போது தோட்டத்திலிருந்து வந்த தெனாலிராமன் அவர்களைப் பார்த்து, "நாளைக்கு வரவேண்டாம். நீங்கள் இறைத்த தண்ணீர் இன்னும் மூன்று தினங்களுக்குப் போதும். எனவே மூன்று தினங்கள் கழித்து வந்தால் போதும். உங்கள் உதவிக்கு நன்றி நண்பர்களே!" என்று கூறினான்.



திருடர்களுக்கு இதைக் கேட்டதும் மிகவும் அவமானமாய் போய்விட்டது. தங்களை ஏமாற்றி நீர் இறைக்கச் செய்த தெனாலிராமனின் அறிவை மனத்திற்குள் எண்ணிவியந்தனர். மேலும் அங்கே இருந்தால் எங்கே மாட்டிக்கொள்வோமோ என்ற அச்சத்தில் திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடித்தனர் திருடர்கள்.

## தெரிந்துகொள்வோம்

1. வினிகரில், 'அசிட்டிக் அமிலம்' உள்ளது.
2. தாவரங்கள் ஒளிச்சேர்க்கையின் போது ஆக்சிஜனை வெளியிடுகின்றன.
3. சிங்கப்பூரின் முந்தைய பெயர், டெமாஸெக்.
4. பிரபல இசைமேதையான பீத்தோவன், ஜெர்மனியில் உள்ள 'பான்' நகரில் பிறந்தார்.
5. 'சீனக்குடியரசின் தந்தை' என்று போற்றப்படுபவர், சன்யாட்சன்.
6. ஒருசெல் உயிரியான அமீபாவின் உடல், புரோட்டோபிளாசத்தால் ஆனது.
7. 'வைட்டமின் ஏ'-ன் வேதியியல் பெயர் ரெட்டினால்.
8. சூரியக்குடும்பத்தைக் கண்டறிந் தவர், கோபர் நிக்கஸ்.
9. 'பாரத ரத்னா' விருது பெற்ற முதல் பெண்மணி, இந்திரா காந்தி.
10. சீனர்கள் தான் முறையான நெல் சாகுபடி முறையை உலகுக்கு அறிமுகப் படுத்தியவர்கள்.
11. 'உயிரியல் கோட்பாட்டின் தந்தை' என்று அழைக்கப்படுபவர், சார்லஸ் டார்வின்.
12. இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம்', லக்னோவில் அமைந்துள்ளது.
13. முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம், மீன்.
14. 'திருவருட்பா'வை இயற்றியவர், வள்ளலார்.
15. பாலில் 'லாக்டிக் அமிலம்' உள்ளது.
16. குஜராத் மாநிலத்தின் புகழ்பெற்ற நடனம், தாண்டியா.
17. இன்சுலின், கணையத்தில் சுரக்கிறது.
18. பெரு நாட்டின் தலைநகரத்தின் பெயர், லிமா.
19. முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு, இந்தியா.
20. 'பிரமிடு கோவில் நாடு' என்று அழைக்கப்படுவது, பர்மா.

## தெரியுமா உங்களுக்கு?

1. வெங்காயம் நறுக்கும் போது, சூயிங்கம் சாப்பிட்டால் கண்ணீர் வராது.
2. புது பேனாவை எழுத கொடுத்தால், 97% மக்கள் தங்கள் பெயரை எழுதுவார்கள்.
3. ஆண் கொசுக்கள் கடிக்காது. பெண் கொசுக்கள் தான் கடிக்கும்.
4. சராசரி மனிதனின் விழிகள் 200 டிகிரி வரை திரும்பும்.
5. கனடா நாட்டவர், தங்களின் புகைபடத்தை ஸ்டாம் பாக பயன்படுத்த முடியும்.
6. 8 மாதம் வரை குழந்தைகள் அழும் போது கண் ணீர் வராது.
7. சகாரா பாலைவனத்தில் பனி மழை 1979 பிப்ரவரியில் பெய்தது.
8. இயர் போன் ஒரு மணி நேரம் அணிந்தால், 700 முறை பாக்டீரியா வளரும்.
9. திராட்சையை மைக்ரோ ஓவனில் சூடு படுத்தினால், வெடிக்கும்.
10. கண்கள் தான் பிறந்ததில் இருந்து வளராமல் அப்படியே இருக்கும்.
11. எல்லோருடைய நாக்கு ரேகைகள், கை ரேகைகள் போல வேறு விதமாக இருக்கும்.
12. 40 டிகிரி வெப்பத்தில், 14.4 கலோரிகள் ஒரு மனிதன் இழப்பான்.
13. சுவீடனில், ஒரு ஹோட்டல், ஐஸினால் கட்டப்பட்டு உள்ளது. ஒவ்வொரு வருடமும் மீண்டும் கட்டப்படும்.
14. பூனை, ஒட்டகம் மற்றும் ஒட்டக சிவிங்கி மிருகங்கள் தான், வலது, வலது, இடது, இடது என நடக்கும், மற்றவையெல்லாம் வலது, இடது என நடக்கும்.
15. வெங்காயம், கொழுப்பை குறைக்கும்.
16. பெரும்பாலான கை கடிகாரம் விளம்பரத்தில் காட்டப்படும் 10:10, புன்னகையை குறிக்கும்.
17. நீல நிறம், மக்களை அமைதி படச் செய்யும். மனித மூளை, 11 வகை இராசாயனத்தை அமைதி படுத்த அனுப்புகிறது.
18. லியொனார்டோ டா வின்சி , ஒரே நேரத்தில், ஒரு கையால் எழுதவும், மறு கையால் வரையவும் செய்வார்.
19. 15 எழுத்து ஆங்கில வார்த்தை, எழுத்துக்கள் திரும்ப வராத வார்த்தை: uncopyrightable
20. குழந்தைகள் பிறக்கும் போது மூட்டுகள் இல்லாமல் தான் பிறக்கின்றனர். 2 - 6 வயதில் தான் வளர்கிறது.
21. எல்லா அமெரிக்க ஜனாதிபதிகளும் மூக்கு கண்ணாடி அணிவார்கள்.
22. வறுக்காத முந்திரி கொட்டை விஷ தன்மை உடையது.
23. சூயிங்கத்தை முழுங்கினால், வயிற்றில் தங்காமல், தானாக வெளியேறி விடும்.
24. கண்களை கசக்கும் போது தோன்றும் நட்சத்திரம் மற்றும் கலர்கள், பாஸ்பீன்ஸ் எனப்படும்

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# சாத்தியங்கள்

நிதர்சனம் அகன்ற நோக்கு
இலக்கியப் பனிப்போர்
பறக்கும் படைப்பாளி

பலர் மண்ணாகியும்
சிலர் படுக்கையில்
காற்றுப்போலவும் கிடக்க
சந்ததிகளின் வம்சத்திருந்து
அதி புதுமை எனக் கூறப்படுவது
மீள உயிர் மரபழித்து
படைக்கப்படும்
நெருங்கிவரும் நாட்களில்

விழித்துப், பசித்துப், போரிட்டு
பதிக்கப்பட்டனவும்
வேர் கொண்டு மனிதம் ஊன்றிய
கலைவடிவங்களும்
அகாலமாகலாம்

வல்லவை வழக்காறழிந்த துயரில்
இயற்கை கோரமுகங்காட்டி
பேரிரைச்சலுறும் நாள் காண்பர்
வாழ்வோர்.

'மீ நவீனப் பாய்ச்சல்'
சேர்த்து வைத்தவற்றை
சில்லறை எனச் சிரித்து
அதை ஆயிரம் பக்க நூலாக்கி
ஆகாயத்துக்கும் அனுப்பலாம்.

எங்கோ ஓர் மூலையில் புலம்பிய
யாதுமறியாப் படைப்பாளியின்
மாயாஜாலத்தின் அசிங்கங்களால்
கவிதைப் பிதாக்களின்
கல்லறைகளில் இருந்து
குருதி கசிவதை
எஞ்சியிருந்த உன்னத வாசகன்
கண்கூடாகப் பார்த்து
ஏங்கி இறந்து போதலும்
சாத்தியப்படும்.

**பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்**

# என் பேனாமுனை!!

உன்னிடம் நீட்டிய வாள் உண்டு
ஏட்டிக்கு ஈட்டியும் உண்டு
வில்லங்கம் தேடி விடைகாண
விரிவான வேதாள வாயும் உண்டு
சூழ்ச்சிக்கான சூத்திரம் உண்டு
சூத்திரக் கூட்டமும் உண்டு
சீழ் உண்டு சிரங்குண்டு
சொறிநாய்க்கும் இடம் உண்டு
என்னிடம் உள்ளதெல்லாம்
ஓயாத முனை ஒன்றே!!

யார் தடுத்தும் ஓயா முனை இது
தீர்வெடுக்கும் தீரா முனை
சத்தியம் சாற்றி சால்பு
நெறிபயிற்றும்
வலிமையிலும் வாதம் செய்யும்
வாக்கினில் அனல் பறக்கும்
உண்மைகள் உரைக்கும்
உக்கிய மனம் உழுது
புத்துயிர் உணர்வளிக்கும்
எத்துணையானாலும்
எகிறிப்பாயும்
ஏற்றம் காணும்!!

மனநெறி காக்கும் என்
கூர்முனைக்கு
நிகருண்டோ எதிரியே! உன்
எந்திர வாழ்வு தகர்த்து
பட்டயமாகப் பாய்ந்து பத்திரம்
காட்டி
திருத்தும் தீவினை அகற்றும்
சத்தமில்லா உன் இரவுகள்
முத்தமிடும் சத்தத்தை
சுத்தமாய் துயில் உரிக்கும்
மனநெறிகாக்கும் என்
மானிடக் காவலன்
என் பேனா முனை!!


**C.J.மாலினி புத்தளம்**

# கனவுக் கதிர்



# நளதமயந்தி காதல் கதை

## இலக்கிய நயம்



மகாபாரதத்தில் வரும் ஒரு கிளை கதை தான் இந்த நளதமயந்தி கதை . இந்த கதையை கேட்பவர்களுக்கு சனிபகவானுடைய பாதிப்பு குறையும் என்ற நம்பிக்கை உண்டு . இப்போது கதைக்குள் செல்வோம்.

ஒரு அடர்ந்த காட்டில் ஒரு குகைக்குள்ள ஒரு வேடுவ தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். அந்த வேடுவனின் பெயர் ஆகுகன் , அவனுடைய மனைவி பெயர் ஆகுகி . இரண்டு பேருமே பரஸ்பரம் அன்பும் காதலும் உள்ள தம்பதியினர். ஒரு நாள் அவங்க வீட்டுக்கு ஒரு முனிவர் வந்தாரு. அந்த முனிவரை இவங்க நல்லபடியாக கவனிக்கிறார்கள். அந்த ராத்திரி அந்த முனிவர் அவங்க வீட்டிலேயே தங்கியிருக்கிற மாதிரி ஆயிடுது.அந்த குகையின் அளவு மிகவும் சிறியதாக இருக்கும் . அந்த குகையில் 2 பேர் மட்டும்தான் தங்க முடியும் . அப்படி இருக்கும்போது , பயங்கரமான குளிர் வெளியே அடித்தபோது அவன் தன்னுடைய மனைவியை தன்னுடன் வைத்திருக்க முடியாமல் குகையின் உள்ளே அந்த முனிவர் தங்கி இருந்தாலும் பரவால்லன்னு சொல்லி தன்னுடைய குகைக்குள்ள தன்னுடைய மனைவியை அனுப்பி இந்த ஓரத்தில தூங்கிக்கலாம் அப்படின்னு சொல்றாரு . தன்னுடைய மனைவி மேல இவ்வளவு நம்பிக்கை உள்ள ஒருத்தர நான் பார்த்ததே இல்லன்னு சொல்லி அந்த முனிவர் 2 பேருக்குமே ஆசிர்வாதம் வழங்கினார். சில ஆண்டுகள் கழித்து அந்த வேடுவன் ஒரு மிருகத்தால் அடித்துக் கொல்லப்பட்டதாகவும், அந்த துன்பம் தாங்கமுடியாத அவனுடைய மனைவியும் கூட சேர்ந்து இறந்து போறாங்க.

இந்த ஜென்மம் இப்படியே முடிந்து போக, அடுத்த ஜென்மத்துல ஆகுகன் ஒரு நாட்டினுடைய இளவரசனான நளனாகவும், ஆகுகி ஒரு நாட்டினுடைய இளவரசியான தமயந்தியாகவும் பிறக்கிறார்கள். அந்த முனிவர் ஒரு அன்னப்பறவையாக பிறக்கிறார். இந்த 3 பேருகுள்ளேயும் எப்படி தொடர்பு வந்தது ? இந்த ஜென்மத்துல நளனும் தமயந்தியும் எப்படி காதலிச்சி சேர்ந்தாங்க ?அதுக்கப்புறம் அவங்க வாழ்க்கையில எப்படி எல்லாம் பிரச்சனைகள் வந்தது ? அத எப்படி எல்லாம் சமாளித்தாங்க ? என்பதுதான் இந்த நளதமயந்தி கதை.

நெடுத நாட்டு மன்னனுடைய மகன்தான் நளன். நளன் ஒரு நாள் தன்னுடைய நந்தவனத்தில் நடந்து கொண்டிருக்கும் போது ஒரு அழகான அன்னப் பறவையை பாக்குறாரு, அந்த அன்னப் பறவையை காவலாளிகளின் மூலம் பிடித்து பக்கத்தில் வைத்து பார்க்கும்போது அந்த அண்ணப்பறவை நளனிடம் நீ ரொம்ப அழகா இருக்க, ரொம்ப அறிவா இருக்க, இந்த நாட்டு மக்கள் மேல பாசமாகவும் இருக்க. உனக்கு ஒரு மகாராணி வந்தா அவளும் அழகா இருக்கணும், அறிவா இருக்கணும், இந்த நாட்டு மக்கள் மேல பாசம் உள்ள ஒரு மகாராணியாகவும் இருக்கணும் அப்படிப்பட்ட ஒரு ராணி ஒரு இடத்தில இருக்கிறாள். நான் உனக்கு அவளை பற்றி சொல்லவா? அப்படின்னு சொல்லி தமயந்தியின் உடைய அழகு அனைத்தையும் மன்னனிடம் வர்ணித்தது அந்த அன்னம். இதைக் கேட்டவுடன் மன்னனுக்கு அவளைப் பார்க்காமலேயே காதல் வந்தது . அப்போது அந்த அன்னம் தமயந்தியிடம் தூது சொல்லவா என்று கேட்டது. அதற்கு நளன் சம்மதம் தெரிவிக்க உடனே பறந்து சென்ற அன்னம் தனிமையில் இருந்த தமயந்தியிடம் நளனுடைய பெருமையை ஓர் பாடலாக பாடியது. இதனால் நளன் மீது தமயந்திக்கு காதல் வந்தது.

இந்த நேரம் பார்த்து தமயந்தியின் தகப்பனார் பீமன் தமயந்திக்கு சுயம்வர ஏற்பாடு செய்தான்.இந்த சுயம்வரத்திற்கு இளவரசர் மட்டுமல்லாமல் தேவர்களும் அந்த இடத்துக்கு வந்தார்கள். அப்படி வந்த தேவர்களில் சனிபகவானும் ஒருத்தர். இவங்க எல்லாருக்குமே தமயந்தி மனசுல நளன் மீது ஒரு காதல் இருப்பது தெரியும் அதனால எல்லாரும் நளனுடைய உருவத்திலேயே மாறி வந்தாங்க. இந்த சுயம்வரத்தில் நளனை அடையாளம் கண்டு அவன் கழுத்தில் மாலைபோடும் நம்பிக்கையோடு வந்த தமயந்திக்கு ஒரு குழப்பம் உருவாகிறது. அந்த இடத்துல கிட்டத்தட்ட 6 பேர் நளன மாதிரியே இருக்காங்க . இதுல உண்மையான நளன எப்படி கண்டு பிடிக்கிறது என யோசித்து பார்க்கும் போது தேவர்கள் அப்படிங்கிற கண்ணிமைகளை மாட்டாங்க என்பது ஞாபகம் வருது இதன் மூலம் நளனை கண்டுபிடித்த அவளின் திருமணம் இனிதாக நடக்கிறது .

இந்த திருமணத்திற்கு பின்னாடி நளன் தமயந்தியை கூட்டிட்டு தன்னுடைய நாடான நெடுத நாட்டுக்கு கூட்டிச்சென்றான். இந்த நேரம் சுயம்வரத்திற்கு வந்து ஏமாந்துபோன அத்தனை தேவர்களுக்கும் கோபம் வருது . அவர்களில் ஒருவர்தான் சனிபகவான். இவர் நளனை துன்பப்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் வர வேண்டும் என எதிர்பார்த்து காத்திருக்கும் வேளையில் நளனுடைய தந்தை நளனுக்கு பட்டாபிஷேகம் செய்து மகாராஜா அறிவிக்கிறார். நளனும் தனது செங்கோல் ஆட்சியை புரிந்தான் . இவர்களின் இனிய இல்லறத்தின் பயனாக இவர்களுக்கு 2 குழந்தைகள் பிறக்கிறார்கள்.அவர்கள் இந்திரசேனன், இந்திரசேனா ஆகும்.



இந்தப் பக்கம் சனி பகவான் சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறார்.சனிபகவானுக்கு கடமையிலிருந்து தவறாத ஒருத்தரை பிடிக்க முடியாது என்று ஓர் விதி முறை உள்ளது. இப்படியிருக்கும்போது ஒருநாள் கோயிலுக்குப் போகும்போது நளன் தன்னுடைய கால்களை சரியாக கழுவாமல் போறாரு. அப்ப சனிபகவான் அவரை பார்த்து இவ்வளவு பெரிய மன்னனுக்கு காலை கூட ஒழுங்காக கழுவ தெரியல அப்படினா நாட்டு மக்களை எப்படி நீதி நெறி வழுவாமல் ஆட்சி செய்ய முடியும். அப்படின்னு கழுவாத கால் வழியாக நளனை பிடித்துவிட்டார்.

எல்லாருடைய வீழ்ச்சிக்குப் பின்னர் இந்த நேரம் காலம் இருக்கும். அதைவிட ,அவங்க கிட்ட ஒரு கெட்ட பழக்கம் இருக்கும்.நல்ல நேரம் இருக்கிற வரைக்கும் அந்த கெட்ட பழக்கம் நமக்கு எந்த துன்பத்தையும் தராது ஆனால் நமக்கு கெட்ட நேரம் வரும்போது இந்த கெட்ட பழக்கம் தான் நம்ம வீழ்ச்சிக்கு காரணமாய் இருக்கும் அந்த மாதிரி ஒரு கெட்ட பழக்கமும் நளனிற்கு இருந்தது. அதுதான் சூதாடும் பழக்கம். மகாபாரதத்தில் எந்த சூதாட்டம் பாண்டவர்களை தெருவில் நிறுத்திய தோ,அதே சூதாட்டம்தான் இப்ப நலனையும் தெருவில் நிறுத்தப் போகிறது. ஒருநாள் நளனுடைய அமைச்சரான புட்கரன் அதனை சூழ்ச்சியின் மூலம் சூதாட்டத்தில் நிறுத்தி அதில் நலனை தோற்கடித்து நளனுடைய நாட்டையும் ஆட்சியையும் பெற்றுக்கொண்டான். இப்போது நளன் அவனுடைய நாட்டை விட்டு காட்டுக்கு வனவாசம் போக வேண்டும் மேலும் யாருடைய கண்ணிலும் படாமல் எங்கேயாவது போய் தான் வாழனும் தன்னுடைய அடையாளத்தை தொலைத்து வாழும் சூழ்நிலையில் வெளியே போகும்போது தமயந்தி தன்னுடைய 2 குழந்தைகளையும் அவளுடைய அன்னையிடம் கொடுத்துவிட்டு நளனை பின்தொடர்ந்து சென்றாள்.

(தொடரும் )

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனநாயகம், பன்முகத்தன்மையை மேம்படுத்த ஜி20 தலைமைத்துவம் இந்தியாவிற்கு வாய்ப்பு

## குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி முர்மு உரை




உலக நாடுகள் இந்தியாவைப் புதிய மரியாதையுடன் பார்க்கத் தொடங்கியுள்ளதைக் குறிப்பிட்ட ஜனாதிபதி திரௌபதி முர்மு, இந்தியாவின் ஜி 20 தலைவர் பதவியானது ஜனநாயகம் மற்றும் பலதரப்பு வாதத்தை மேம்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகும் என்றும், மிகவும் சமமான உலக ஒழுங்கை உருவாக்குவதற்கு சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கான முதன்மை மற்றும் அதன் முயற்சிகளை மேம்படுத்த முடியும் என்றும் கூறினார்.

74 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு தாம் ஆற்றிய உரையில், உலக அரங்கில் இந்தியா பெற்றுள்ள மரியாதை புதிய வாய்ப்புக ளையும் பொறுப்பு களையும் விளைவித்துள்ளது என்றார்.

"சமீப ஆண்டுகளில் நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களையும் மாற்றியமைக்கவும், மக்களின் ஆக்கப்பூர்வமான ஆற்றல்களை வெளிக்கொணரவும் மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிகளின் விளைவாக, உலகம் இந்தியாவை ஒரு புதிய மரியாதையுடன் பார்க்கத் தொடங்கியுள்ளது. பல்வேறு உலக மன்றங்களில் எங்கள் தலையீடுகள் சாதகமாக இடம்பெறத் தொடங்கியுள்ளன. நேர்மறையான வேறுபாடு, உலக அரங்கில் இந்தியா பெற்றுள்ள மரியாதை, புதிய வாய்ப்புகளையும், பொறுப்புகளையும் விளைவித்துள்ளது. இந்த ஆண்டு, ஜி20 நாடுகளின் குழுவின் தலைவராக இந்தியா உள்ளது என்று அவர் கூறினார்.

உலகளாவிய சகோதரத்துவம் என்ற குறிக்கோளுடன், இந்தியா அனைவரின் அமைதி மற்றும் செழிப்புக்காக நிற்கிறது என்று ஜனாதிபதி முர்மு கூறினார்.

குடியரசு தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய முதல் உரை இதுவாகும்.

ஜி20 கட்டமைப்பின் தலைவர் பதவியானது ஜனநாயகம் மற்றும் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகும். மேலும் சிறந்த உலகம் மற்றும் சிறந்த எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான சரியான மன்றம் இது. இந்தியாவின் தலைமையின் கீழ், மிகவும் சமமான மற்றும் நிலையான உலகத்தை உருவாக்குவதற்கான தனது முயற்சிகளை ஜி20 மேலும் மேம்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன் என்றார் அவர்.

ஜி20 நாடுகள், உலக மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கையும், உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதால், உலகளாவிய சவால்களை விவாதிப்பதற்கும் தீர்வுகளைக் காண்பதற்கும் இது ஒரு சிறந்த மன்றமாகும் என்று ஜனாதிபதி கூறினார்.

"என்னுடைய கருத்துப்படி, புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை அவற்றுள் மிகவும் அழுத்தமாக உள்ளன. உலக வெப்பநிலை அதிகரித்து வருகிறது. மற்றும் தீவிர காலநிலை நெருக்கடி நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன. நாங்கள் இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்கிறோம். மேலும் மேலும் மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க, எங்களுக்கு பொருளாதார வளர்ச்சி தேவை. ஆனால் அந்த வளர்ச்சியானது புதைபடிவ எரிபொருளில் இருந்து வருகிறது. துரதிர்ஷ்டவசமாக, புவி வெப்பமடைதலின் சுமையை ஏழைகள் மற்றவர்களை விட அதிகமாக தாங்குகிறார்கள் என்று அவர் கூறினார்.

"மாற்று எரிசக்தி ஆதாரங்களை உருவாக்குவதும் பிரபலப்படுத்துவதும் தீர்வுகளில் ஒன்றாகும். சூரிய ஆற்றல் மற்றும் மின்சார வாகனங்களுக்கு கொள்கை உந்துதலைக் கொடுப்பதன் மூலம் இந்தியா இந்த திசையில் பாராட்டத்தக்க முன்னணியை எடுத்துள்ளது. இருப்பினும், உலக அளவில், வளர்ந்து வரும் பொருளாதாரங்களுக்கு மேம்பட்ட நாடுகளின் உதவி தேவை. ஏனைய நாடுகளுக்கு தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் நிதி உதவி வடிவில் அவை தேவைப்படுகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் ஜி20 தலைவர் பதவியை இந்தியா முறையாக ஏற்றுக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க தயாராகின்றது நரேந்திர மோடியின் அரசு

வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க நரேந்திர மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு தயாராகின்ற நிலையில் அதுபற்றிய ஒரு பக்கப் பார்வையைத் தருகின்றது இக்கட்டுரை. வரும் முதலாம் திகதி புதன்கிழமை இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வரவு – செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

வேலைவாய்ப்பை உருவாக்குதல், உள்கட்டமைப்பிற்கான செலவு அதிகரிப்பு, பற்றாக்குறையை நிறைவு செய்தல் மற்றும் பொருளாதாரத்தை மீண்டும் பாதையில் கொண்டு வருதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு சமநிலையான பட்ஜெட்டை பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று நிபுணர்கள் புதன்கிழமை தெரிவித்தனர்.

மத்திய அரசின் பட்ஜெட்டுக்கு முன்னதாக பங்குச் சந்தைகள் தாழ்த்தப்பட்ட நிலையில், இந்த மாதம் இதுவரை பி.எஸ்.இயின் சென்செக்ஸ் கிட்டத்தட்ட சீராக உள்ளது.

கார்ப்பரேட் வருவாய் சீசன் கூட சந்தைகளை உற்சாகப்படுத்தத் தவறியது, அதே நேரத்தில் ஐடி மற்றும் பேங்க் எக்ஸ் போன்ற சில குறியீடுகள் சில நேர்மறையான நகர்வுகளைக் கண்டன.

சந்தைகளின் முடக்கப்பட்ட செயல்திறன் வெளிநாட்டு போர்ட்ஃபோலியோ(முகதா) முதலீட்டாளர்கள் (FPIs) இந்தியாவிலிருந்து நிதியை நகர்த்துவதால், அவர்கள் மலிவான மதிப்பீடுகளுடன் வளர்ந்து வரும் சந்தைகளை எதிர்பார்க்கிறார்கள்.

இந்த மாதத்தில் இதுவரை உள்நாட்டு பங்குகளில் இருந்து ரூ.16,500 கோடிக்கு மேல் எடுத்துள்ளனர்.

மேலும், பணவீக்கம் மற்றும் சாத்தியமான உலகளாவிய மந்தநிலை ஆகியவை முதலீட்டாளர்களின் மனதைத் தொடர்ந்து ஆக்கிரமித்துள்ளன.

ஈக்விட்டி ரிசர்ச் ஆனந்த் ரதி ஷேர்ஸ் & ஸ்டாக் ப்ரோக்கர்ஸ் தலைவர் நரேந்திர சோலங்கி கூறுகையில் –

தேர்தலுக்கு முந்தைய பட்ஜெட் 2023 முதல் முதலீட்டாளர்கள் மூன்று முக்கிய காரணிகளில் கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில், பங்கு முதலீட்டாளர்கள் மூலதன ஆதாயங்களுக்கு ஒரே மாதிரியான வரி கட்டமைப்பை எதிர்பார்க்கிறார்கள். வரி செலுத்துவோர் அதிக செலவழிப்பு வருமானம் பெற வேண்டும்.

இரண்டாவதாக, முதலீட்டாளர்கள் பொருளாதாரத்தில் நிதி ஸ்திரத்தன்மைக்கு அவசியமான நிதி ஒருங்கிணைப்பை எதிர்பார்க்கிறார்கள்.

மூன்றாவதாக, முதலீட்டாளர்கள் மானியங்கள், முதலீட்டு இலக்குகளுக்கான தெளிவான சாலை வரைபடம் மற்றும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பொதுத்துறை நிறுவன தனியார்மயமாக்கலை விரைவுபடுத்துதல் போன்ற வளர்ச்சிக்கான இடையூறுகளை நியாயப்படுத்த கொள்கை சீர்திருத்தங்களைப் பற்றி சிந்திக்கிறார்கள். அதற்கு ஒருங்கிணைப்பு அவசியம் என அவர் மேலும் கூறினார்.

வழக்கமாக பெப்ரவரி முதலாம் திகதி நடைபெறும் மத்திய அரசின் பட்ஜெட் வாசிப்புக்கு முன்னதாக இந்தியாவின் பங்குகள் முடக்கப்பட்ட வர்த்தகத்தைக் காணக் கூடும் என்று வரலாறு கூறுகிறது.

ஒட்டுமொத்தமாக, பட்ஜெட்டுக்கு முந்தைய பேரணிகள் கடந்த 10 ஆண்டுகளில் ஆறில் காணப்பட்டன,ல்.மேலும் பட்ஜெட்டுக்குப் பிந்தைய, சந்தை கடந்த 10 ஆண்டுகளில் ஆறு மடங்கு சரிந்தது.

மேலும், தேசிய பங்குச் சந்தையின் (என்.எஸ்.இ.) பெஞ்ச்மார்க் குறியீடு நிஃப்டி 50 பட்ஜெட் நாள்களில் ஏழு முறை சரிந்துள்ளது.

வரவு – செலவுத் திட்டம் என்பது அரசாங்கத்தின் புத்தகங்களின் வரவு – செலவுகள் மற்றும் வரவிருக்கும் ஆண்டிற்கான வருமானம் ஆகியவற்றுடன் மாநில விவகாரங்களை வழங்குவதாகும்.

வணிகங்கள் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கு சாதகமானதாகக் கருதப்படும் நடவடிக்கைகளை பட்ஜெட் உள்ளடக்கியிருந்தால், அது பங்குச் சந்தைகளில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று பொதுவாக நம்பப்படுகிறது.

மறுபுறம், ஒரு பட்ஜெட் வணிகங்களுக்கும் பொருளாதாரத்திற்கும் எதிர்மறையாகக் காணப்படும் படிகளை உள்ளடக்கியிருந்தால், அது பங்குச் சந்தைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

கூடுதலாக, அறிவிப்புகள் அல்லது வட்டி விகிதங்கள், வரிகள் மற்றும் அரசாங்க செலவினங்களில் ஏற்படும் மாற்றங்கள் பங்குச் சந்தைகளையும் பாதிக்கலாம்.

வரவிருக்கும் பட்ஜெட்டின் தாக்கம் உண்மையான பட்ஜெட் திட்டத்தைப் பொறுத்தது மற்றும் 2024 இற்கான நிதிப் பற்றாக்குறையை சந்தைகள் கூர்ந்து கவனிக்கும்.

6 சதவீதத்துக்கும் அதிகமான எண்ணிக்கை சந்தையை ஏமாற்றும். ஆனால், இது சாத்தியமில்லை" – என்று ஜியோஜித் ஃபைனான்சியல் சர்வீசஸ் நிறுவனத்தின் தலைமை முதலீட்டு வியூக நிபுணர் வி.கே.விஜயகுமார் கூறினார்.

சந்தையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய முன்மொழிவு மூலதன ஆதாய வரியை அதிகரிக்கக்கூடும் என்று அவர் மேலும் கூறினார்.

பொருளாதாரத்தில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தும் அல்லது அதிக செலவழிப்பு வருவாயை சம்பளம் பெறும் வர்க்கம் மற்றும்/அல்லது கார்ப்பரேட் நிறுவனங்களின் கைகளில் விட்டுச்செல்லும் எந்த ஒரு நேர்மறையான செய்தியும் சந்தைகளை உயரச் செய்யும் என்று ஜார்விஸ் இன்வெஸ்ட் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி சுமித் சந்தா கூறினார்.

சம்பளம் பெறும் வகுப்பினரின் வரி அடுக்குகளில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது கார்ப்பரேட்டுகளுக்கு கேபெக்ஸ் அல்லது குறைக்கப்பட்ட வரிகளுக்கான ஊக்



குவிப்பு ஆகியவை நேர்மறையாகப் பார்க்கப்படும், மேலும் பட்ஜெட்டுக்குப் பிறகு சந்தைகள் கூடும் என்று எதிர்பார்க்கலாம் என்று அவர் மேலும் கூறினார்.

மேலும், தனியார் மற்றும் அரசு செலவினங்களுக்கு உந்துதல், முதலீட்டை விலக்குதல், பி.எல்.ஐ. (தயாரிப்பு – இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை) திட்டத்தை விரிவுபடுத்துதல் மற்றும் வரி அடுக்குகளில் நிவாரணம் ஆகியவை சந்தையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில நடவடிக்கைகள் என்று ANMI இன் தலைவர் கமலேஷ் ஷா கூறினார். .

ஜியோஜித்தின் விஜயகுமார், பட்ஜெட்டின் தாக்கம் குறுகிய காலமே இருக்கும் என்று நம்புகிறார். உலகப் பொருளாதாரத்தில், குறிப்பாக அமெரிக்காவில் ஏற்படும் முன்னேற்றங்களால் சந்தைப் போக்குகள் அதிகமாக வழிநடத்தப்படும்.

பெப்ரவரி 1 கூட்டத்திற்குப் பிறகு மத்திய வங்கியின் வர்ணனை மோசமானதாக இருந்தால், மற்றும் தரவுகள் அமெரிக்காவில் பணவீக்கம் குறைந்து வருவதைக் காட்டினால், சந்தைகள் கூடும்.

யெஸ் செக்யூரிட்டீஸ் நிறுவனப் பங்குகளின் தலைவர் அமர் அம்பானி, முந்தைய பட்ஜெட்களின் உயர்ந்த கணிப்புகளைப் போலன்றி, அரசு அதன் சொத்துப் பணமாக்குதல் இலக்குகளில் சுமாரானதாக இருக்கும் என்றார்.

எல்லா சாத்தியக்கூறுகளிலும், சவாலான உலகளாவிய பின்னணியில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி இலக்கு குறைந்த இரட்டை இலக்க விவகாரமாக இருக்கும். மேலும் அரசாங்கம் அதன் நிதி விவேகமான பாதை வரைபடத்திலிருந்து விலகிச் செல்லாது.

சந்தை நிபுணர்களின் கூற்றுப்படி, சுகாதாரம், உரம், உள்கட்டமைப்பு, பாதுகாப்பு காப்பீடு, உற்பத்தி, டிஜிற்றல் மயமாக்கல், தகவல் தொடர்பு, கல்வி, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் போன்றவை பட்ஜெட்டில் இருந்து பயனடையும் என்று எதிர்பார்க்கப்படும் துறைகள்.

(மூலம்:ரெடிவ் கொம்)

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# தொடுவானம் தொலைவாக..



## சிறுகதை

சிவக்குமார் யுவராணி

வெளுத்திருந்த வானம் கறு கறுவென்று இருண்டு வர சிறுசிறு துளிகளாய் ஆரம்பித்த மழை,பாரிய சத்தத்துடன் பெய்ய தொடங்கியது. பாதி நனைந்த உடையுடன் வேக மாக வீட்டுக்குள் வந்தாள் கயல், அப்பாடா என்ன..மழை என்று கூறிகொண்டே தன் டவலை எடுத்து முகம் கைகளை துடைதாதவாறு,

அந்த மழைக்கு சூடா ஒரு டீ குடிச்சா எப்டி இருக்கு,அம்மா...எங்க இருக்கிங்க என அழைத்தபடி

சமையல் அறை பக்கம் செல் கிறாள்.

ஆனால் அம்மா இல்லை ஐயோ அம்மா வெளிய பொய்ட்டாங்க போல நல்ல மழ வேற சரி மழ நின்னு வரு வாங்களா இருக்கும் என தனக் குள்ளே கூறி கொண்டு கேஸை பற்ற வைக்கிறாள்.

மழைக்கு இதமாக தேனீர் ஒன்றைஊற்றிக்கொண்டுஜன்னலின் முன் பக்கம் செல்கிறாள்.

மழை இடி சத்தத்துடன் இருக் கிறது.தேனீரை குடித்தபடி தொடர்ந் தும் பெய்து கொண்டே. ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள். மழை அதே வேகத்தில் பெய்து கொண்டே இருந்தது.இந்த தனிமையும் தேநீரும் அவளுக்கு பிடித்த ஒன்று,அத்துடன் மழை வேறு, அவளின் மனதில் ஏதோ ஒரு உணர்வை ஏற்படுத்தி யது. தன் செல்போனில் மியூசிக் லிஸ்டை பிலே செய்கிறாள்.அதில் ராஜாவின் ராகங்கள் மழை சத்தத் துடன் இன்னிசையாக காதுக்குள் கேட்கிறது.

இந்த இசை அவளின் மனதில் ஏதோ ஒரு உணர்வை தட்டி விடுகிறது,ஆமாம் அவளுக்கு மிகவும் பிடித்த அடிக்கடி மீண்டு பார்க்கும் அந்த ஞாபகம்.

ராஜாவின் ராகங்கள் காதோடு கேக்க...தன்னிலை மறந்தாள் கயல்.

கயல்விழி இவள் பெயர் பெயருக்கு ஏற்றது போல் கயல்விழி பார்வை கொண்டவள். மா நிறமாக இருந்தா லும் அழகானவள். எல்லோரிடமும் சகஜமாக பழகுவாள். என்ன சற்று வாயாடி,மனதில் பட்டத்தை அப்படியே பேசுவாள். வெக்கம் என்பது சிறிதுமில்லை, அப்போது இவளுக்கு வயது 21 ஆசிரியர் கல்லூரியில் தன் கல் வியை தொடரும் காலம், தன் நண்பி சிந்து உடன் ஆஷ்டலில் தங்கி இருந்தாள்.நிறைய நட்பு வட்டாரங் கள் இருந்தாலும் அவள் கயலுக்கு உயிர்.இருவரும் ஒருவரை ஒருவர் விட்டு கொடுக்க மாட்டார்கள்.எதை யும் மறைக்கவும் மாட்டார்கள். காலேஜ்கு சென்றாலே ஒரே கேலி சிரிப்புதான்,இவர்கள் இருக்கும் இடத்தில் சிரிப்பு சத்தம் கேட்டு கொண்டே இருக்கும்.நன்றாக படிக்க கூடியவர்கள்.இவ்வாறு சென்ற இவளின் வாழ்க் கையில் அறிமுகமானான்,புகழ் இவனும் கயல் போலவே தான் ஒரு சில விடயங்களில் ஒத்து போனவர்கள். இருவரும் வேறு வேறு கிளாஸ் என்றாலும் நன்றாக பேசி கொள்வார்கள்.

ஆரம்பத்தில் மேலோட்டமாக இருந்த இவர்களின் நட்பு காலப்போக்கில் மேலும் நெருக்கமானது. கயல், சிந்து, ஒரு புகழ் எதையும் மறைத்து கொள்ள மாட்டார் கள்.நல்ல நட்பு.இருப்பினும் கயல் புகழுடன் இன்னும் நெருக்கமாக பழகினாள். புகழின் இயல்பான பேச்சு அழகினால் காலேஜில் அதிக பெண்களுக்கு இவன் மீது ஒரு காதல் இருந்தது.ஆனால் கயல் இவனிடம் யாரையும் நெருங்க விட மாட்டாள். தன்னை தவிர யாரிடம் சரி பேசினால் என்ன உனக்கு அவ்வளவு பேச்சி எனக்கு புடிக்கலஎன அடிக்கடி கோப படுவாள். இவளின் பேச்சுக்கு தன் புன்சிரிப்புடன் அடியே சண்ட காரி நா யாரு கூடவும் பேச கூடாதா ஓ கூட மட்டுமா பேசனும்,அதுக்கு நா ஊமையா பொறந்து இருக்கு போல,எங்க அப்பா அம்மா கூட இப்டி சொல்ல மாட் டாங்க உயிர வாங்காம இரு என்பான்.எவ்வளவுதான் திட்டினாலும் அவனுடன் பேசாமல் இருக்க மாட்டாள்.அப் படி ஒரு சில சமயங்களில் பேசாமல் இருந்தாலும் மேடம் கோபமா என் கூட பேச மாடாங்களா என வரும் வாட்சாப் மெசேஜ்கள் மூலம் சண்டைகளும் மறந்து போகும். கயல் அதிகம் கோபம் கொள்வது புகழ் தன்னை தாண்டி வேறு யாரிடம் சரி அதிகமாக பேசினால் மட்டும் தா அதை இவளின் பார்வை மூலமே புரிந்து கொள்வான். யாரு சரி பெண்கள் அதிகமாக பேசினால் கூட கயல் என்ன பாத்தா கொண்ணுடுவா சோ ஆள விடுங்கடி என ஒடி விடுவான்.

அவ்வாறு இருந்தாலும் எக்ஸ் ம் ம் நேரங்களில் நன்றாக படித்து புள்ளிகளையும் பெற்று விடுவார்கள்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் வெளியில் செல் வார்கள்.அதிகமாக படம் பார்க்கவே செல்வதுண்டு, இருக்கும் போது புகழின் மீதுள்ள பாசம் இன்னும் இவ்வாறு இருக்கும் போது அதிகமானது. இன்னும் சில பிரண்ஸ் என்னபா கயல் ரெண்டு பேரும் செம்ம ஜோடி என கலாய்ப்பதும் உண்டு, அட போங்கப்பா நடக்க நினைக் கிற மாதிரி இல்ல அவன்,என்னோட குட் பிரண்ட் தப்பா பேசாத என கோவப்படுவாள்.

ஒருநாள் புகழ் தன் வகுப்பில் உள்ள சத்தியா என்ற பெண்ணுடன் ஏதோ பேசியதை பார்த்து விட்டு அதிகமா சண்டையிட்டாள். உனக்கு என்ன பைத்தியமா ஏ இப்டி நடக்குற,இதெல்லாம் எனக்கு சரி வராது என்ன பத்தி புரிஞ்சது அவ்வளவுதான் என ஆரம்பித்த சண்டை இரண்டு நாட்களுக்கு தொடர்ந்தது. சோரி சொல்லியும் புகழின் கோபம் குறையவில்லை,வாட்ஸ்ஸப்பில் போட்ட மெஜேக்கு கூட ரிப்பேலே செய்யவில்லை.

கயல் எவ்வளவோ. இந்த மாற்றம் கயலுக்கு மன வேதனையை தந்தது.எவ்வளவு சண்டை வந்தாலும் பேசாமல் இருந்தது கிடையாது.இதான் முதல் தடவை சரியாக சாப்பிடாமல் தூங்காமல் அழுது கொண்டே இருந்தாள். சிந்து இவளை பற்றி புகழிடம் கூறினாள். பாவம்பா அவ அவள பத்தி தெரியும் தானே,நீ கொஞ் சம் பேசுஎன்றாள்.

இல்லப்பா எப்போ பாத்தாலும் சண்ட நா யாரு கூடவும் பேச கூடாத இப்டி இவ பண்ணும் போது இவ கூட ஏ பழகுனோனு வ

தோணுது.என்றான்.

சரிபா அவளுக்கு ஓ மேல ரொம்ப பாசம் எல்லாரு கூடவும் சண்ட புடிக்கிறாளா,இல்லையே கிட்ட மட்டு தானே சோ ஓ புரிஞ்சிக்கோப்பாஎன சமாதானம் செய்கிறாள்.

சிந்து வின் பேச்சில் சற்று கோபம் குறைந்து,வாட் சாப்பில் அவளின் மேசேயை ஒப்பன் செய்து பார்க்கிறான். நூருக்கு மேல் சாரி சொல்லி இருந்தாள்.

அவளின் மெசேஜ் பார்த்து சிரித்தபடியே ரிப்ளை செய்கிறான்.

செல்லம் சாப்பிடலேயோ

என பாசமாக கேட்க,போனை கையிலேயே வைத்திருந்தால் போல உடனே பார்த்து விட்டாள்.அதெல்லாம் ஒன்று மில்லா என மீண்டும் கோபப் பட்டாள்.

சரிமா அத விடு நான் தானே திட்டினே,நா திட்டாம ஒன்ன யாரு திட்ட போறாங்க, என்றான்.

இவ்வாறு பல மெசேஜ் உரை யாடல் மூலம் இருவரும் சம ரதானம் ஆனார்கள்.

அன்று மாலை கயலை பார்க்க சென்றான். புகலை பார்த்ததும் ஓடி வந்து கட்டி கொண்டாள்.அழுதபடியே ஏன்டா நாய் ஏ கூட பேசாம ஒன்னால இருக்க முடியும் தானே என்றாள்.

இல்லடா மா கொஞ்சம் கோ பம் வந்திடுச்சு அத இனி இப்டி பண்ண மாட்டேன்.என்றான் அவளின் தலையை தடவிய படியே, அப்படியே அந்த சண்டை முடிந்தது.

இந்த சண்டைக்கு பிறகு கயழிடம் ஒரு சில மாற்றங்கள், எல்லா நேரங்களிலும் புகழின் ஞாபகம்.

அவனின் மேசேஜ்களை பார்த்து சிரிப்பாள். இந்த மாற்றம் அவளுக்கு பிடித்து இருந்தது.

அவளின் வளவள பேச்சுக்கள் குறைந்தது.

புகழிடம் அமைதியாக பேசுவாள்.

மரியாதையா சொல்வாள்.

அவனின் ஒரு சில விடயங்களை ஆரம்பித்தாள்.

இரண்டு ஆண்டுகளாய் அவளை தொடும் ஏற் படாத உணர்வு,இப்போது இயல்பாக அவன் பேசும் எதார்த்தமாக அவன் இவளை தொடும் போது,உடல் ஆரம்பித்தது.

சிறுசிறு தீண்டல்களும், ஏதோ ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

பதில் ரசிக்க போது போது நடுங்க

இவளுக்கு புரியவில்லை. மனதளவில் பயந்தாள், முன்பு போல் இல்லை இப்போது புகழிடம் சகஜமாக பேச முடியவில்லை.மனதால் குழம்பினாள். பேசுவ தும் குறைந்தது தனிமையில் அதிகம் இருந்தாள்.இந்த மாற்றம் புகழுக்கு விளங்கியது.இதை பற்றி கயலிடம் கேட்க ஆரம்பித்தான். கயல் நீ முன்ன மாதிரி இல்ல என்னாச்சி,ஏதோ போலவே இருக்கஎன கேட்டான், ஆனால் அவளுக்கு பதில் கூற முடியவில்லை.

ஒன்று மட்டும் புரிந்து கொண்டாள் அதை நட்பு இல்லை.அதை தாண்டிய உணர்வு என்பதை உணர்ந் தாள்.

அதெல்லாம் ஒன்னும் இல்லடா நா எப்பவும் போல தா இருக்கே என்றாள்.ஆனால் இவளின் பேச்சில் தடு மாற்றம் இருந்தது.

இவள் பொய் சொல்கிறாள்.என புரிந்துக் கொண் டான். இரண்டு வருட நட்பு என்றால் சும்மாவா:

சொல்லும் காதலை விட சொல்லாத காதலுக்கே உணர்வுகள் அதிகமல்லவா, ஒருவாறு சமாளிதாதபடி வந்துவிட்டாள்.

ஒரு இரவும் முழுவதும் யோசித்தாள். இந்த உணர்வு மனதில் மகிழ்ச்சியை உணர்த்தி கொண்டே இருந்தது. இந்த யோசனைக்கு மத்தியில் நாளை தவணை விடுமுறையை மறந்துவிட்டாள்,நாளைக்கு லீவு வீட் டுக்கு போகனும்,புகழ் இன்னைக்கு நைட்டுக்கு போறேன்னு சொன்னா நம்பலும் காலையில போக லாம். என்றால் சிந்து. சரிபா என்றால் சற்று அமைதி யாகவே வீட்டிற்கு சென்று வந்து புகழிடம் இதை பற்றி பேசலாம் என யோசித்தாள்,

காலையில் புறப்பட்டால் வீட்டிற்கு,இன்றுடன் வந்து நான்கு நாட்கள் இன்னும் மூன்று நாட்களில் காலேஜ் செல்ல வேண்டும்.

கயல்,கயல் கதவ திற... என ஒரு சத்தம்,

அது அம்மாவின் குரல் கிடுக்கிட்டாள் எப்போ பாத் தாலும் இவன் நினைப்பபவே இருக்கே..என மனதுக் குள் கூறியவாறே கதவை திறக்க,

இதோ வரேமா..கொஞ்சம் இருங்க... ஓடினாள், பாதி அருந்திய தேநீரை வைத்துவிட்டு..

காலைக்கதிர் Kalaikkathir

## பரீட்சை மோசடிக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாம் கற்பித்த பாடசாலை அதிபரின் மகன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றினார் என்பதற்காக அவர் விடை எழுத இந்த இரு ஆசிரியர்களும் உதவி னார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந் தது.

வெளியிலிருந்து அலைபேசி (மொபைல்) ஊடாக இவர்கள் வழங்கிய விடைகளை மண்டபத்திலிருந்து கேட்டு எழுதிக்கொண்டிருந்தசமயம் மாணவன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டிருந்தார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் விடை எழுதுவதற்கு உதவிய இரு ஆசிரியர்களும் கண் டறியப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். பிடிபட்ட மாணவனின் தந்தையான இரு ஆசி ரியர்களும் பணியாற்றும் பாடசாலை யின் அதிபரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

குறித்த பாடத்தின்போது பரீட்சைக் கடமையில் இருந்த ஆசிரியர் தனது அலைபேசி மூலம் மற்றைய ஆசிரிய ருக்கு விடைகளைக் கூறியிருக்கிறார். விடைகளைப் பெற்றுக்கொண்ட ஆசிரி யர் அவற்றை மாணவனுக்குத் அலை பேசி வாயிலாகத் தெரியப்படுத்தியிருக் கிறார். பாடசாலை அதிபரின் ஏற்பாட் டின்படியே இந்த மோசடி நடந்தது என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது.

பரீட்சை மண்டபத்தில் இந்த மோசடி கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவனின் பெறுபேறு இடை நிறுத்தப்பட்டதோடு அதிபர் மற் றும் இரு ஆசிரியர்களிற்கும் இடைக் கால பணித்தடை விதிக்கப்பட்டது.

மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் ஒழுக்காற்று நடவடிக்கை மற் றும் விசாரணையின் காண்புகளிற்கு அமைய இரு ஆசிரியர்களிற்கும் தற் போது மாகாண கல்வி அமைச்சின் செயலாளர். கட்டாய ஓய்வு வழங்கி யுள்ளார்.

இதேநேரம் அதிபர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மத்தி ய கல்வி அமைச்சிற்கே இருப்பதனால் அதிபரின் விசாரணை காண்பு மற்றும் சிபார்சுகள் மத்திய கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளர் வரதீஸ் வரனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது ஆசிரியர்களுக்குக் கட்டாய ஓய்வு தண் டனை வழங்கப்பட்டதை அவர் உறுதி செய்தார்.

## சுதந்திர தினத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பகுதிகளின் சில இடங்களில், வீதித் தடைகளைப் பயன்படுத்தி சோதனை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என்று பொலிஸ் ஊடக பேச் சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், இந்தப் பணிகளில் ஈடு படுத்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அடித்து வட்டிப் பணம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

அளவெட்டியைச் சேர்ந்த 26 வய தான விதுராஜ் என்பவரே இந்தக் கும் பலின் தலைவர் என்றும் நேற்றுமுன் தினம் அவரை நீதிமன்றில் முற்படுத் திய சமயம் விளக்கமறியலில் வைக் கப்பட்டார் என்றும் பொலிஸார் தெரி வித்தனர்.

அவரது குழுவில் இயங்கியவர்க ளான சுன்னாகம், மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த சி.சிறிகாந்தா (வயது 29), அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த க.கருணாகரன் (வயது 36), சுன்னாகம் சூறாவத்தையைச் சேர்ந்த ரா.வசந்த ராஜா (வயது 24), சுன்னாகம் மயிலங் காட்டைச்சேர்ந்தவர்களான வ.யதுர்சன் (வயது 24), செ.ரமேஸ்கரன் (வயது 54) ஆகியோர் நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்டனர். இவர்கள் தவிர மற்றொரு சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸில் சரணடைந்ததை அடுத் துக் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் அனைவர் மீதும் இருவ ரைக் கடத்தி தாக்கினார்கள் என்கிற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ரமேஸ்கரன் முச்சக்கரவண்டி வைத்திருக்கிறார். அடிக்கவேண்டிய நபர்களை இவரே வீடுகளுக்குச் சென்று தனது வண்டியில் ஏற்றி வருவார். அப்படி அழைத்து வரப்படுபவர்கள் யதுர்சனுக்குச் சொந்தமான வாழைத் தோட்டத்தில் வைத்துத் தாக்கப்படுவார் கள். அதனை காணொலி (வீடியோ) பதிவு செய்துகொள்வார்கள். வட்டிப் பணத்தையும் முதலையும் தவணை தவறாது ஒழுங்காகக் கட்டவேண்டும் என்றும் இல்லையேல் அடிவிழும் காணொலியை சமூக ஊடகங்களில் பரப்பி விடுவோம் என்றும் மிரட்டுவார் கள். பொலிஸாரிடம் முறையிட்டால் வெட்டுவோம் என்றும் மிரட்டுவார்கள். இதற்குப் பயந்துகொண்டு பாதிக்கப்பட்ட யாருமே இதுவரையில் பொலிஸில் முறைப்பாடு செய்ததில்லை.

இப்படி இந்த குற்றச் செயலின் பின் னணியை விளக்கினார்கள் யாழ். விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார்.

யாழ். பிராந்திய குற்றப் பொலிஸ் மூத்த அத்தியட்சகர் கீழ் வழிகாட்டலில் யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோ தகர் மேனன் மேற்பார்வையில் மாவட்ட குற்ற உப பொலிஜஸ் பிரதீப் தலை மையிலான குழுவினர் இந்த குற்றக் கும்பல் குறித்த விசாரணைகளை மேற் கொண்டு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இவ்வாறு இரு வரை வாழைத் தோட்டத்தில் வைத்துத் தாக்கும் காணொலிகள் சமூக ஊடகங் களில் வெளியானதைத் தொடர்ந்து அதன் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக இப்போது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரிடமிருந்து பொலிஸாரால் முறைப் பாடு பெறப்பட்டுள்ளது.

காணொலியில் பதியப்பட்டுள்ள சம்பவம் 2019ஆம் ஆண்டு இடம்பெற்றது என்று பொலிஸார் கூறுகின்றனர். எனினும் இந்த ஒருங்கிணைக்கப்பட்ட குற்றத்தைச் செய்து வந்த கும்பலுக்குள் ஏற்பட்ட பிளவை அடுத்தே தற்போது அந்தக் காணொலிகள் வெளிவந்துள்ளன என்றும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சுன்னாகத்தில் டாட்டா கனரக பிக் கப்பால் சுசுக்கி வெகனார் காரை மோதி த் தள்ளி அதிலிருந்தவர்களை வாள் களால் வெட்டினார்கள் என்கிற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட் டுள்ள மருதனார் மட்டம் சந்தை வியாபாரியான ஜெகன் என்பவர் தலை மையில் முன்னர் இந்தக் குழுவினர் செயற்பட்டு வந்துள்ளனர். பின்னர் அந்தக் குழு பிளவுண்ட நிலையில் இரண்டு மூன்று குழுக்களாச் செயற்பட்டு வந்துள்ளனர்.

சுன்னாகம் வாகன மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து ஒரு தரப்பை மறு தரப்பு பொலிஸாரிடம் மாட்டி விடும் வகையிலேயே இந்தக் காணொலிகள் பொது வெளிக்கு வந்துள்ளன என்று விசாரணையில் தெரியவந்திருக்கின்றது.

மாதாந்த வட்டி 10 சதவீதத்துக்கும் அதிகமாக ஒரு லட்சம் ரூபா வரையான பணத்தை வட்டிக்குக் கொடுத்துவிட்டு, அதனை வாரா வாரம் வசூலிப்பது இந் தக் கும்பலின் குற்றத் தொழிலாக இருந்து வந்துள்ளது. வாராந்தத் தவ ணையைக் கட்டத் தவறுபவர்களை இவ்வாறு தனி இடத்திற்கு அழைத்துத் தாக்கி அதனைக் காணொலி எடுத்து அவர்களை மிரட்டுவதுடன், தம்மிடம் பணம் கடன் பெறும் ஏனையவர்களுக் கும் அதனைக் காட்டி எச்சரிக்கை செய்து வந்திருக்கின்றனர் என்கின்ற னர் இவர்கள்.

இருப்பினும் இப்போது நபர்களைக் கடத்தித் தாக்கியது தொடர்பான குற்றச் சாட்டின் பேரிலேயே இவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் மேற்கொண்ட சட்டவிரோத நிதிக் கையாளுகைகள் குறித்து விசா ரணையோ சட்ட நடவடிக்கையோ மேற்கொள்ளப்படவில்லை. (உ)









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2023இல் வெளியிடப்பெற்றது.

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**

பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 14 சனிக்கிழமை 28.01.2023 கதிர் 333

## திருமலை மீனவர்கள் 5 பேர் மியன்மாரில் தடுத்துவைப்பு

திருகோணமலை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து கடலுக்குச் சென்ற 5 மீனவர்கள் மியன்மாரின் யாங்கூன் காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் களது உறவினர்கள் தெரிவித் துள்ளனர். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி 2

# அஞ்சி ஓடுபவர்களல்லர் நாம் எதையுமே எதிர்கொள்வோம்



### வீரவசனம் பேசுகின்றார் மகிந்த

தேர்தலைக் கண்டு அஞ்சி ஓடும் கூட்டத்தினர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் அல்லர். நாட்டில் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இருக்கின்றது. 2

## சாள்ஸின் பதவி விலகலை ஜனாதிபதி ஏற்கவில்லை

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பி.எம்.எஸ்.சாள்ஸின் பதவி விலகலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ள வில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது.

ஆணைக்குழுவின் 5 உறுப்பினர்களில் ஒருவரான சாள்ஸ் அந்தப் பதவியிலி ருந்து தான் விலகிக்கொள் கிறார் என்று ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தார். எனி னும் அந்தக் கடிதம் 2



## கொக்கட்டிச்சோலை படுகொலை மகிழடியில் நினைவுகூரப்பட்டது

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் படு கொலை இன்று நினைவுகூரப்பட்டது. படு கொலை நிகழ்ந்து 36 ஆண்டுகள் கடந்துள்ளன. மட்டக்களப்பு மகிழடித்தீவு சந்தியில் உள்ள படுகொலைசெய்யப்பட்டவர்களின் நினைவுத் தூபி யில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 2

## இந்திய - யாழ். மீனவர்கள் இன்று சிநேகபூர்வ சந்திப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.29

இலங்கைக் கடற்படையால் கைப்பற்றட்ட தமது படகுகளை மீட்பதற்காக யாழ்ப்பாணம் வநதுள்ள தமிழ்நாடு மீனவர் களுடன் குடாநாட்டு மீனவர்கள் இன்று நேரில் சந்தித்து 2

## வவுனியாவில் கையெழுத்து வேட்டை




(வவுனியா நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைக் காவலில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத் துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் 2

## அமெரிக்கப் பிரதிநிதி இலங்கைக்கு விஜயம்



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கானதுணைச் செயலாளர் விக்டோரியா நுலண்ட் இன்று முதல் பெப்ர வரி 3 ஆம் திகதி வரை நேபா ளம், இந்தியா, இலங்கை மற் றும் கட்டார் ஆகிய நாடுக ளுக்கு விஜயம் செய்யவுள் ளார். 2

## மின் துண்டிப்பு தொடர்பில் முறையிடுமாறு கோரிக்கை

### ஜனக ரத்நாயக்க அதிரடி நடவடிக்கை



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியான பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை மின்வெட்டுஏற்பட்டால் அது தொடர்பில் முறைப்பாடு செய்யு மாறு பொதுப் பயன் பாடுகள்ஆணைக்குழு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த முறைப்பாடுகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும்எனஅந்தஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத் நாயக்க 2

## வவுனியாவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வசந்த முதலிகேவை விடுதலை செய்யக் கோரியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தியும், தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தும் கையெழுத்துப் போராட்டம் இன்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.

காலை 10 மணியளவில் வவுனியா பழைய பஸ் நிலையம், இலுப்பையடிப் பகுதிகளில் வவுனியா மாவட்ட மக்கள் திட்ட ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கையெழுத்து சேகரிப்பு இடம்பெற்றது.

இதில் வவுனியா நகர சபை உறுப்பினர்கள், வவுனியா மாவட்ட மக்கள் திட்ட ஒன்றியத்தின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது கையெழுத்துக்களை இட்டு ஆதரவை வழங்கினர்

## அமெரிக்க......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமெரிக்கக் கூட்டுறவின் பரந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நேபாளத்தின் புதிய அரசுடன் செயற்பாடுகளில் ஈடுபடுவார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள அவர், அமெரிக்க இலங்கை நட்புறவின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் இலங்கையின் முயற்சிகளுக்குத் தொடர்ந்து அமெரிக்காவின் ஆதரவை உறுதி செய்வார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## திருமலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திருகோணமலை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து குறித்த மீனவர்கள் தொழிலுக்குச் சென்றனர்.

அந்தக் குழுவினர் திக்வெல்ல, வெலிகம மற்றும் திருகோணமலை பகுதிகளில் வசிப்பவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

மீனவர்களின் படகு வேறொரு படகு மூலம் இழுத்துச் செல்லப்பட்டது என்று மீனவர்களின் உறவினர்களுக்குத் தகவல் கிடைத்ததையடுத்து, அவர்கள் இது குறித்து கடற்றொழில் திணைக்களத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## அஞ்சி ஓடுபவர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அநுராதபுரம் விகாரைக்கு நேற்று விஜயம் செய்த போதே முன்னாள் ஜனாதிபதி இதனைக் கூறினார்.

வரலாற்று சிறப்புமிக்க ஜயர சிறி மகா போதியை முன்னிட்டு சமய வழிபாடுகளில் ஈடுபட்ட மஹிந்த ராஜபக்ச பின்னர், ருவான்வெளி மகா சாயியையும் வழிபட்டார்.

வழிபாடுகளை முடித்து விகாராதிபதிகளையும் சந்தித்த பின்னர் தேர்தல் தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தமது கட்சி பலமாக இருக்கின்றது என்றும், தேர்தலைக் கண்டு அஞ்சி ஓடும் கூட்டத்தினர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் அல்லர் என்றும் கூறினார். தமக்கு வெற்றி வாய்ப்பு உறுதி என்ற பின்னர் தேர்தலுக்குத் தாம் ஏன் பயப்பட வேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## மின் துண்டிப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்துள்ளார். அதற்கமைய, 077 5687387 என்ற வட்ஸ்அப் இலக்கத்தின் ஊடாகவோ அல்லது 011 8 392 641 என்ற தொலைநகல் இலக்கத்தின் ஊடகவோ முறைப்பாடுகளைச் செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அதற்கு மேலதிகமாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் ஊடாகவும் முறைப்பாடு செய்ய முடியும் எனவும் அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிநேகபூர்வ பேச்சில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை மீறிய சமயம் கடற்படையினரால் பிடிக்கப்பட்ட படகு களில் 17 படகுகளின் வழக்குகள் ஊர்காவற் றுறை நீதிமன்றில் இடம்பெறுகின்றது. இந்த வழக்கு நடவடிக்கைகளிற்காக
யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள 10 தமிழ்நாடு மீனவர்களும் யாழ். நகரில் உள்ள விடுதியில் தங்கியுள்ளனர். இவ்வாறு தங்கியுள்ள தமிழக மீனவர்களையே உள்ளூர் மீனவர்களும் சந்தித்து தமது நிலைமகள் தொடர்பில் உரையாடினர்.

## சாள்ஸின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்னும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

இந்த நிலையில் சாள்ஸின் பதவி விலலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கவில்லை என்று ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சாள்ஸின் பதவி விலகல் கடும் கண்டனங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளானது. நடக்க இருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் குழப்பும் சதி முயற்சின் ஒரு பாகமே அவரது பதவி விலகல் என்றும் விமர்சிங்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே அவரது பதவி விலகலை ஜனாதிபதி ஏற்கவில்லை என்கிற தகவல் வெளியாகி இருக்கின்றது.

## கொக்கட்டிச்சோலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆகியன நினைவேந்தல் நிகழ்வுகளைத் தனித் தனியாக நடத்தின.

நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் செயலாளர் நாயகமுமான கோவிந்தம் கருணாகரம் தலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பட்டிருப்பு தொகுதி தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன் தலைமையில் தமிழரசுக் கட்சியின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் உயிர்நீர்த்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



நமது பார்வை

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000

# நியாயமான கோரிக்கையல்ல

வடக்கு கிழக்கில் உள்ள பௌத்த வழிபாட்டிடங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய படையினரை அங்கிருந்து அகற்றவேண்டாம் என்று பௌத்த உயர் பீடாதிபதிகள் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

பௌத்த மத வழிபாட்டிடங்களின் பாதுகாப்பையும் இருப்பையும் உறுதிப்படுத்துவது அரசின் கடமை என ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் போரின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பௌத்த மதத் தலங்களைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் அளப்பரிய பங்களிப்பைச் செய்து வருகின்றனர். அவர்கள், பௌத்த பிக்குகளுக்கும் உதவிகளை வழங்கி வருகின்றனர். எனவே, அந்த இடங்களில் இருந்து பாதுகாப்புப் படையினரை அகற்றுவது அந்த இடங்களின் வளர்ச்சிக்கு இடையூறாக அமையும்" என்றும் அவர்கள் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுபொரு அபத்தமான கடிதம். இந்த நாட்டில் பௌத்தத்தாலும் பிக்குகளாலும் ஏனைய மதங்களுக்கும் மதத்தவர்களுக்கும் அச்சுறுத்தல்கள் உள்ளன. அத்தகைய அச்சுறுத்தல்களுக்காக பிக்குகள் கடந்த காலங்களில் நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் அது போன்ற அச்சுறுத்தல்கள் பௌத்த மதத் தலங்களுக்கு இருந்ததில்லை.

போர்க் காலத்தில் பௌத்த அரச படைகளால் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் வழிபாட்டிங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. வான் வழிக் குண்டு வீச்சின் மூலம் அத்தகைய பல வழிபாட்டிடங்கள் முற்றாக நாகமாக்கப்பட்டிருக்கின்றன. அதுபோன்று தலதா மாளிகை மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. அது தவிர பௌத்த வழிபாட்டிடங்கள் திட்டமிட்டு இலக்கு வைப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை.

ஆனால் போருக்குப் பின்னரும் இலங்கையில் ஏனைய மதங்களும் வழிபாட்டிடங்களும் கடுமையான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன. அந்தளவிற்கு பௌத்த மதத்திற்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படவில்லை. தமிழ் மக்களின் தனியார் காணிகள் பல ஆக்கிரமிக்கப்பட்டு எந்தவித அனுமதியும் இன்றி விகாரைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பல புத்த துறவிகள் இந்து ஆலயங்களை ஆக்கிரமித்து விகாரைகளை உருவாக்குகின்றார்கள் என்கிற வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றன.

இப்படி போருக்குப் பின்னரான காலத்தில் பௌத்தத்தால் ஏனைய மதங்கள்தான் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனவே தவிர பௌத்தம் வேறு எந்தத் தரப்பாலும் அச்சுறுத்தலுக்கு உள்ளானதாக இல்லை. உண்மையில் வடக்கு கிழக்கில் பௌத்தத்தின் ஆக்கிரமிப்புக்களுக்கு உதவுபவர்களாகவே ஆயுதப் படையினர் இருக்கின்றனர். பௌத்த மக்கள் வாழாத வடக்கிலும் கிழக்கின் பல பகுதிகளிலும் இதனை பௌத்த நாடாக உருவகிப்பதற்கான பௌத்த வழிபாட்டிடங்களைப் படையினர் இன்றிப் போசிப்பது மகாநாயக்கர்களுக்கு முடியாத காரியம்தான், அதற்காக பௌத்தம் அச்சுறுத்தலுக்குள்ளாவது போன்ற போலி முழக்கத்தை எழுப்பி அதற்காகப் படையினரை நிறுத்தக் கோருவதில் எந்த நியாயமுமில்லை.

விகாரைகளுக்குப் பாதுகாப்புத் தேவை என்றால் காவல்துறையினரின் உதவியை அதற்குப் பெற்றுக்கொள்ள முடியும். வடக்கு கிழக்கு எங்கும் காவல் நிலையங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலம் போதிய பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், பாதுகாப்புக்கு என்று கூறி படையினரை நிறுத்துவதற்கு மாகாநயக்கர்கள் முற்படுவதன் பின்னணி புரிந்துகொள்ள முடியாததல்ல. இந்த நாட்டு மக்களின் வழிபாட்டுச் சுதந்திரம் அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் அது பௌத்தத்திற்கு மட்டுமே உரியதன்று என்பதையும் அரச தலைவர் மனதிலிருத்தி மாகாநாயக்கர்களின் கோரிக்கையை பரிசீலிப்பதே நன்று.

# உள்ளூராட்சி தேர்தல் பணிகளில் தொடர்ந்து ஆணைக்குழு உறுப்பினர்கள் ஈடுபடுவார்கள்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதைக்கும் வகையில் திட்டமிட்ட வகையில் போலி செய்திகள் வெளியாகுகின்றமை அவதானிக்க முடிகிறது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பதவி விலக உள்ளனர் எனவும், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார் எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் சுயமாக பதவி விலகல் அல்லது பதவி விலகியதாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாகக் குறிப்பிடப்படும் கடிதத்தின் பிரதிகள் ஏதும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இதுவரை உத்தியோகப்பூர்வமாக சமர்ப்பிக்கப்படவில்லை.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை தடையில்லாமல் முன்னெடுப்பார்கள்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மீதான மக்களின் நம்பிக்கையை சிதைக்கும் வகையில் திட்டமிட்ட வகையில் போலி செய்திகள் வெளியாகுகின்றமை அவதானிக்க முடிகிறது.– என்றுள்ளது.

# கிளிநொச்சியில் காலபோக நெற் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் விலாங்கு புழு தாக்கம்



கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கையின்போது விலாங்குப் புழுவின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளதாக கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் உதவி பணிப்பாளர் என். ராஜேஸ் கண்ணா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையில் பல்வேறுபட்ட நோயின் தாக்கங்கள் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், புதிதாக நெற்பயிர்களில் விலாங்குப் புழுவின் தாக்கமும் அவதானிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிர்களில் இலைகள் மஞ்சள் நிறமாகி வளர்ச்சி குன்றி காணப்படுகின்றமை தொடர்பில் விவசாயிகளால் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து, விவசாய போதனாசிரியர்களுக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வயல் நிலங்களை கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் உதவி பணிப்பாளர் என். ராஜேஸ் கண்ணா, விவசாய போதனாசிரியர்கள் மற்றும் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் ஆகியோர் கள விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போதே குறித்த விலாங்குப் புழுவின் நோயின் தாக்கம் கண்டறியப்பட்டது.

# பொது மக்கள் வசதி கருதி கொழும்பில் மதிப்பீட்டு வரி செலுத்த அலுவலகங்கள்!

கொழும்பில் வாழும் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் வசதி கருதி வருடாந்த மதிப்பீட்டு வரியை செலுத்துவதற்கு அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன என கொழும்பு மாநகர சபை மதிப்பீட்டு வரி திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட அலுவலங்களில் மதிப்பீட்டு வரியை செலுத்த முடியும் என திணைக்களம் தெரிவித்தது.

மாவட்ட அலுவலகம் 1: இல. 79, மகாகுமாரகே மாவத்தை, கொழும்பு – 14. தொலைபேசி இல: 011 2447128

மாவட்ட அலுவலகம் 2: இல. 163, மிஹிந்து மாவத்தை, கொழும்பு – 12. தொலைபேசி இல: 011 2431694, 011 2431710, 011 2323489.

மாவட்ட அலுவலகம் 2பி: இல. 37, ஸ்ரீ ஜினரத்தன மாவத்தை, ஹுனுபிட்டி, கொழும்பு – 2. தொலைபேசி இல: 011 2307710, 011 2436888, 011 2329283

மாவட்ட அலுவலகம் 3: சமூக நிலைய கட்டடம், கெம்பல் பார்க், கொழும்பு – 8. தொலைபேசி இல: 011 2698673

மாவட்ட அலுவலகம் 4: இல. 147, ஹை லெவல் வீதி, கொழும்பு – 6. தொலைபேசி இல: 011 2513253.

மாவட்ட அலுவலகம் 5: இல. 66, மெனிங் ப்ளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு – 6. தொலைபேசி இல: 011 2364142

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நான் மட்டும் அதிபரா இருந்தால்! ட்ரம் போட்ட பரபரப்புப் பதிவு



நான் மட்டும் அமெரிக்க அதிபராக இருந்திருந்தால் ரஷ்யா – உக்ரைன் போரை 24 மணி நேரத்தில் முடிவுக்குக் கொண்டு வந்திருப்பேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப். 2020ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த அதிபர் தேர்தலில் ட்ரம்ப் தோல்வியுற்றார். இதனையடுத்து அமெரிக்காவின் பல பகுதிகளில் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் கலவரமாக வெடித்தது.

இது அமெரிக்க வரலாற்றில் பெரும் கரும்புள்ளியாகக் கருதப்படுகிறது. அந்தப் போராட்டங்களின் போது ட்ரம்ப் சமூக வலைதளங்கள் வாயிலாக வெறுப்பை விதைத்தார் என்று கூறி பேஸ்புக், ட்விட்டர் போன்ற நிறுவனங்கள் அவருக்கு தடை விதித்தன.

இந்தத் தடையை அடுத்து ட்ரம்ப் ட்ரூத் சோஷியல் என்று தனக்காக ஒரு பிரத்யேக சமூக வலைதளத்தையே தொடங்கினார். இந்த சமூக வலைதள பக்கத்தில் வெள்ளிக்கிழமை அவர் பதிவைப் பகிர்ந்தார். அதில், நான் மட்டும் அமெரிக்காவின் அதிபராக இருந்திருந்தால் ரஷ்யா உக்ரைன் போரே நடந்திருக்காது. அதையும் மீறி போர் மூண்டிருந்தால் அந்தப் போரை இவ்வளவு காலம் நீடிக்கவிடாமல் மத்தியஸ்தம் செய்து முடித்து வைத்திருப்பேன். அதுவும் 24 மணி நேரத்தில் போரை நிறுத்தியிருப்பேன். ஆனால் இப்போது மனித உயிர்கள் மதிப்பின்றி வீணாக பலியாகிக் கொண்டிருக்கின்றன என்று பதிவிட்டுள்ளார்.

வியாழக்கிழமையும் ட்ரம்ப் உக்ரைன் போர் பற்றி இன்னொரு பதிவும் பகிர்ந்திருந்தார். அதில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு ஒரு கோரிக்கை விடுத்திருந்தார். அதில் ரஷ்யா உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வாருங்கள். அதைவிடுத்து உக்ரைனுக்கு இன்னமும் டாங்குகளை வழங்கினால் போர் அடுத்த கட்டத்திற்கே நகரும். அது அணு ஆயுத போருக்கு வழிவகுக்கும். முதலில் டேங்குகள், பின்னர் அணு ஆயுதங்கள் என்று வரிசை கட்டும். இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என்று கோரியிருந்தார். உக்ரைனுக்கு அமெரிக்கா 3 டஜன் M1 Abrams டாங்குகளை வழங்கும் என்று பைடன் நிர்வாகம் அறிவித்த நிலையில் ட்ரம்ப் இந்தக் கருத்துகளை பதிவிட்டு வருகிறார்.

அமெரிக்காவுக்கான ரஷ்ய தூதர் அண்டோலி ஆண்டோனோவோவும் அமெரிக்காவின் முடிவுக்குக் கண்டனம் தெரிவித்திருந்தார். ஸ்கை நியூஸுக்கு அவர் அளித்தப் பேட்டியில், அமெரிக்கா உக்ரைனுக்கு டாங்குகள் வழங்குவது வம்பை வளர்க்கும் செயல் மட்டுமே. அமெரிக்காவுக்கு எங்களை வீழ்த்த வேண்டும் என்பதே வியூகமாக உள்ளது என்று கூறியுள்ளார்.

## சோமாலியாவில் ஐஎஸ் தளபதி தாக்குதலில் சாவு

சோமாலியாவில் அமெரிக்க சிறப்பு அதிரடிப் படையினா மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையில் இஸ்லாமிய தேச (ஐஎஸ்) அமைப்பின் முக்கிய தளபதி பிலால் அல்–சூடானியும், 10 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனா.

இது குறித்து அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சா லாய்ட் ஆஸ்டின், "அல்–சூடானியைக் குறிவைத்து சோமாலியாவின் கிழக்கு தொலைதூரப் பகுதியிலுள்ள மலைக் குகைப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அவா கொல்லப்பட்டதால் அமெரிக்காவுக்கும், கூட்டணி நாடுகளுக்கும் கூடுதல் பாதுகாப்பு கிடைத்துள்ளது' என்றார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த இரண்டு வாரங்களாக நிலவி வரும் மிகக் கடுமையான குளிருக்கு இதுவரை 2 லட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் பலியானதாக அந்நாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

## மினிபஸ் அளவான விண்கல் ஆபத்தின்றி பூமியை கடந்தது

'2023 BU' என அழைக்கப்படும் ஒரு மினிபஸ் அளவிலான விண்கல் ஒன்று பூமியை கடக்க உள்ளதாக சில நாட்களுக்கு முன் அறிவியலாளர்கள் அறிவித்தனர்.

இந்த நிலையில் '2023 யஷீ' விண்கல் எந்த வித ஆபத்தும் இல்லாமல் இன்று பூமியை கடந்து சென்றதாக நாசா அறிவியலாளர்கள் தெரிவித்தனர். ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள, உக்ரைனின் க்ரிமியா பிராந்தியத்திலுள்ள அமெச்சூர் விண்வெளி நிபுணரான கென்னடி போரிசோ என்பவரால் கடந்த வாரம்தான் இவ்விண்கல் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின், இந்த விண்கல்லின் சுற்றுவட்டப்பாதை குறித்து அறியப்பட்டு கண்காணிக்கப்பட்டு வந்தது.

மேலும், '2023 யஷீ' விண்கல் பூமிக்கு சுமார் 3,600 கிமீ நெருக்கத்தில் வந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது. பூமியையும், அதன் மேற்பரப்பில் உள்ள சாட்டிலைட்களையும் இந்த விண்கல் மோதும் வாய்ப்பு குறைவு என்றும் அது மோதியிருந்தாலும் அதனால் ஏற்படும் பதிப்புகள் குறைவு என்றும் அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

பூமியிலிருந்து சுமார் 36,000 கிலோ மீற்றர் உயரத்தில் பல விண்கல்கள் பூமியை வலம் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றுடன் ஒப்பிடுகையில் '2023 யஷீ' விண்கல் 10 மடங்கு நெருக்கத்தில் பூமியை கடந்து சென்றிருக்கிறது.

அறிவியலாளர்கள் தினமும் பூமிக்கு அருகே உள்ள விண்கற்களை குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். அவற்றில் பெரும்பாலனவை ஆபத்தானவை அல்ல.



## பாகிஸ்தான் ரூபாயின் மதிப்பு வரலாறு காணாதளவு வீழ்ச்சி

பாகிஸ்தான் ரூபாய் மதிப்பு வரலாறு காணாத அளவுக்கு சரிந்துள்ளது. அதாவது பாகிஸ்தான் ரூபாய் மதிப்பில் 225 கொடுத்தால் தான் ஒரு அமெரிக்க டாலர் வாங்க முடியும்.

இலங்கையைப் போன்றே பாகிஸ்தானில் சமீப காலமாக கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனினும் இலங்கையளவிற்கு அங்கு நிலமை இன்னும் படுமோசமாகவில்லை.

பசி, பட்டினி தலை விரித்தாடுகிறது. உணவுப் பொருட்களின் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. அந்நியச் செலாவணி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு டொலர்களை உள்ளூர் பணமாக மாற்ற மக்கள் கள்ளச்சந்தைகளில் குவியத் தொடங்கியுள்ளனர். மின்வெட்டு சமாளிக்க முடியாத அளவுக்கு பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது.

இந்நிலையில், பிரதமர் பாஸ் ரெீஃப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார். பாகிஸ்தான் ரூபாய் மதிப்பு வரலாறு காணாத பாதிப்பை சந்தித்துள்ள நிலையில், சர்வதேச நிதியமான நிதியம் தனது கட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கூறியுள்ளார்.

மேலும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 6 புள்ளி 5 பில்லியன் டொலர் மதிப்பிலான நிதியை விடுவிக்க வேண்டும் என்றும், சர்வதேச நிதியத்திற்கு பாகிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது. சர்வதேச நிதியத்தின் திட்டம் ஒன்று தாமதமடைவதால் பாகிஸ்தான் ரூபாய் மதிப்பு சரிவு கண்டு வருகிறது என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, இந்த மாதத் தொடக்கத்தில் பாகிஸ்தானின் அந்நிய செலாவணி கையிருப்பு 5.8 பில்லியன் டொலராக குறைந்தது. இது கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத சரிவு ஆகும். அந்நிய செலாவணி கையிருப்புக் குறைந்துள்ள நிலையில், வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு பாகிஸ்தான் உள்ளாகி இருக்கிறது.

வெளிநாடுகள் மற்றும் ஐஎம்எஃப் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளிடமிருந்து பெற்ற கடனை பாகிஸ்தானால் திருப்பிச் செலுத்த முடியாத சூழலில் உள்ள பாகிஸ்தான் ஐஎம்எஃப் நிதித் திட்டத்தின் உதவியுடன் மீள முடியுமா என்று பார்க்கிறது. இலங்கை எப்படி அந்நியச் செலாவணி கையிருப்பு இல்லாமல் வீழ்ச்சியை சந்தித்ததோ அதே சூழலுக்கு பாகிஸ்தானும் தள்ளப்பட்டு வருகிறது.

# அம்மா அம்மா என்று கதறக் கதற கைதியை கொன்ற அமெ. காவலர்

அமெரிக்காவில் டயர் நிக்கோலஸ் என்ற 29 வயது கறுப்பின இளைஞர் ஒருவர் போலீஸ் வன்முறையில் உயிரிழந்த சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் இதுபோன்ற சம்பவங்கள் புதிதல்ல என்பதை நிரூபிப்பது போலவே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

அமெரிக்காவின் மெம்ஃபிஸ் நகரில் தான் இச்சம்பவம் நடந்துள்ளது. அதுவும் கொல்லப்பட்டவரின் வீட்டிலிருந்து 90 மீற்றர் தொலைவில் தான் இந்தக் கொடூரம் நடந்துள்ளது.

பைக்கில் வந்து கொண்டிருந்த நிக்கோலஸை பொலீஸார் திடீரென சுற்றி வளைக்கின்றனர். அப்போது அவரை தரையில் படுக்குமாறு எச்சரிக்கின்றனர். அந்த இளைஞரும் பொலீஸ் சொல்வது போல் செய்கிறார். ஆனால் அப்படியிருந்தும் அவரைத் தாக்குகின்றனர். அந்த இளைஞரோ நான் தான் நீங்கள் சொல்வதை செய்துவிட்டேனே என்று கேட்கிறார். அப்போது இன்னொரு காவல் அதிகாரி நீ உன் கைகளை பின்னால் கட்டுகிறாயா இல்லை நான் அவற்றை உடைக்கவா? என்று கேட்கிறார். உடனே நிக்கோலஸ் கைகளைக் கட்டுகிறார்.

அப்படியிருந்தும் தாக்குதல் தொடர்கிறது. பொறுக்க முடியாமல் அவர் அலறுகிறார். பின்னர் அங்கிருந்து தப்பி ஓடுகிறார். அவரை டேஸர் எனப்படும் மின்சாரம் பாய்ச்சும் கருவி மூலம் வீழ்த்துமாறு சக அதிகாரிகள் கூற இன்னொரு காவலர் டேஸரை பயன்படுத்துகிறார். நிக்கோலஸ் வீழ்கிறார்.

அவர் அம்மா, அம்மா என்று கூக்குரல் இடுகிறார். 90 மீட்டர் தொலைவில் இருக்கும் தனது அம்மாவுக்கு தனது அபயக் குரல் கேட்காதா என்ற எதிர்பார்ப்புடன் கதறுகிறார். ஆனால் கதறலுக்கு இடையே தாக்குதல் நடக்க நிக்கோலஸ் உயிரிழக்கிறார். இவை அனைத்துமே காவலர்கள் அணிந்திருந்த பாடி கேமரா எனப்படும் உடலோடு பொருத்தப்பட்டிருக்கும் கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஐந்து காவலர்கள் ஈடுபட்டதாகத் தெரிகிறது. இச்சம்பவம் அமெரிக்கா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நிக்கோலஸுக்கு நீதி வேண்டி போராட்டங்கள் தொடங்கியுள்ளன. சம்பவத்தில் ஈடுபட்ட ஐந்து அதிகாரிகளுமே கறுப்பினத்தை சேர்ந்தவர்கள்தான். டடாரியஸ் பீன், டெமட்ரியஸ் காலி, எம்மிட் மார்டின், டெஸ்மாண்ட் மில்ஸ் ஜூனியர், ஜஸ்டின் ஸ்மித் ஆகிய ஐந்து பேரும் கொலை குற்றத்திற்காக கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மெம்ஃபிஸ் நகரில் நடந்த இந்தக் கொடூர சம்பவம் தொடர்பான பாடி கேம் வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தேர்தல் ஆணைக் குழுவின் குழப்பமான சூழலுக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்குக!

## இலங்கை தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் வலியுறுத்து




உள்ளூராட்சித் தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக, தேர்தல் ஆணைக்குழுவிற்குள் பொதுமக்களுக்குத் தெரியவரும் வகையில் காணப்படும் குழப்பமான சூழலுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என இலங்கை தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் வலியுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தையும் வலுவான அவநம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.

எனவே, தேர்தல் ஆணைக்குழு அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் என்றும் தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

தேர்தலை நடத்துவதற்கு இணைக்கப்பட வேண்டிய நிறுவனங்களுடனான தற்போதைய உறவுகளும் குழப்பமில்லாத வகையில் பேணப்பட வேண்டும் என நாம் நம்புகின்றோம்.

தற்போது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகியுள்ளதோடு , அவரது பதவி விலகலுக்கான காரணம் ஆணைக்குழுவின் தலைவரது செயற்பாடுகளாகும் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்தோடு ஆணைக் குழுவின் மற்றுமிரு உறுப்பினர்கள் ஆணைக் குழுவின் அலுவலகத்துக்கோ அல்லது கூட்டங்களுக்கு சமுகமளிப்பதில்லை என்றும் தெரியவருகிறது.

இதேவேளை தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் , அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாத அதே வேளை, இதற்கான அறிவிப்பில் ஆணைக் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கையெழுத்திடவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

தேர்தலை சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் நடத்துவதோடு, அதன் வழக்கமான முடிவுகளின் செல்லுபடியாகும் தன்மையும் மிகவும் முக்கியமானது என்று தேசிய தேர்தல் கண்காணிப்பு மையம் உறுதியாக நம்புகிறது.

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகரின் சான்றுபடுத்தழுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குழுநிலை விவாதத்தின் போது சட்ட மூலத்தில் சேர்க்கப்பட்ட திருத்தங்களை, சபாநாயகரின் சான்றுபடுத்தலின் பின்னர் சரியாக அறிந்து கையாள முடியும்.

எனினும் தேர்தல் செலவு தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஆணைக்குழு இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாகவும், அது சட்ட ரீதியாகக் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறிருந்தும் சபாநாயகர் குறித்த சட்டத்துக்கு சான்றளிக்கும் முன், அது செயல்படுத்தப்படும் என்று சுட்டிக்காட்டும் நடவடிக்கைகளை எடுப்பது முறையானதல்ல.

மேலும் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்க தேர்தல் ஆணைக்குழு மிக அவசரமாக செயற்படுகின்றமை எம்மை மிகவும் ஆச்சரியப்படுத்துகிறது.

தேர்தல் ஆணைக்குழுவில் பிளவுகள் இருக்கின்றன எனவும், கூட்டங்களை நடத்த நடப்பெண் கூட இல்லை என்றும், சில உறுப்பினர்கள் ஆணைய அலுவலகத்துக்கு வருவதில்லை என்றும் பல்வேறு செய்திகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன. இவை மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலைமையாகும்.

இது பொதுமக்கள் மத்தியில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அச்சத்தையும் வலுவான அவநம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.

எனவே, தேர்தல் ஆணைக்குழு அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அனைத் துத் தகவல்களையும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பகிரங்கப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின் றோம். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் எம்.பி. சுந்தரமூர்த்தி காலமானார்



*1989 பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ஈரோஸ் சுயேச்சை குழு உறுப்பினர் பட்டியலில் எம்.பியாகத் தேர்வு செய்யப்பட்டு, சிறிது காலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய மாணிக்கம் சுந்தர மூர்த்தி (வயது 63) இன்று சனிக் கிழமை தமிழகத்தில் காலமானார்.*

*யுத்தத்தின் முடிவு வரை வன்னி யில் தங்கி இருந்து பொருண்மிய மேம்பாட்டு பணிக்காக இயக்கத்து டன் சேர்ந்து உழைத்து வந்த இவர், சுகவீனமுற்று தமிழகத்தில் தங்கி இருந்த கடைசி காலம் வரை வன் னியில் விழிப்புலனற்றோர் மேம்பாட்டுக்காகத் திட்ட முன்மொழிவு களைத் தயாரித்து, வழங்கி, அதன் செயற்பாட்டுக்காக உழைத் தவர்.*

*தமிழர் தேசத்தின் பொருண்மிய மேம்பாட்டுக் காக கடைசி வரை உழைத்த ஒரு மக்கள் சேவகன் இன்று காலமானார்.*

# இணக்கப்பாட்டை விரைவில் எட்டமுடியும் இராஜதந்திரிகளிடம் கொன் நம்பிக்கை



அனைத்துக் கடன்வழங்குநர்களுடனான இணக்கப்பாட்டை வெகுவிரைவில் எட்டமுடியும் என்றும், அதன்மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை விரைவில் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தலைமையிலான வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளான இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர்சாராஹல்டன், சர்வதேச கடன் மற்றும் நிதி மேம்பாட்டுக்கொள்கைப் பிரிவின் தலைவர் கரிஸ் அப்ல்கன்–ரேலர், பொதுநலவாய வெளிவிவகார மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தின் தெற்காசிய மற்றும் ஆப்கானிஸ்தான் பொருளியலாளர் மத்தியூ வேர்டிங்காம், பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் மேம்பாட்டுப்பிரிவின் தலைவர் ஆன்ட்ரூ ப்ரைஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்க–

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான அடித்தளமாக அமையுமென இலங்கை மக்கள் நம்பிக்கைகொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி ஜனாதிபதி உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரசாங்கமும் தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதை முன்னிறுத்தி செயலாற்றிவருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இப்போது அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மறுசீரமைப்புக்களின் விளைவாகப் பொதுமக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றனர் என இராஜாங்க நிதி இராஜாங்க அமைச்சர், இந்த மறுசீரமைப்புக்கள் குறுங்கால அடிப்படையில் கடினமானவையாக இருந்தாலும் நீண்டகால ரீதியில் நன்மையளிக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவின் ஊடாக அடைந்துகொள்ளக்கூடிய நேர்மறையான மாற்றங்கள் தொடர்பில் நாட்டுமக்கள் நம்பிக்கைகொண்டிருக் கின்றார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்க எடுத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேரவாவியை 30 லட்சம் டொலர் செலவில் இலவசமாக சுத்தப்படுத்தி அழகுபடுத்த ஜப்பான் நிறுவனம் இணக்கம்



கொழும்பில் உள்ள பேர வாவியை சுத்தம் செய்து அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தை இலவசமாக முன்னெடுப்பதற்கு ஜப்பானிய நிறுவனம் ஒன்று அரசாங்கத்திடம் இணக்கம் தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன மற்றும் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கு இடையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் குறித்த நிறுவனம் இந்த உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

ஆரம்பிக்கப்படும் நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இந்த வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு , இதற்காக 30 வட்சம் டொலர் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதி சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து மானியமாக இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது.

பேர வாவி தற்போது மாசடைந்துள்ள நிலையில் அதனை சுத்தப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கங்காராம விகாராதிபதி கலாநிதி கிரிந்தே அஸ்ஸாஜி தேரர் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பெப்ரவரி முதல் வாரத்தில் இது தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு , அதன் பிறகு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# 75 ஆவது தேசிய சுதந்திர தினத்துக்காக தேசியகொடி தயாரிப்பு பணிகள் ஆரம்பம்!

எதிர்வரும் இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தினத்துக்காக கொழும்பிலுள்ள ஒரு சிறு கடையில் பெண் தையல்காரர் தேசியக் கொடிகளைத் தயாரிக்கிறார்.

# மறுசீரமைப்பை விரைவுபடுத்தி வரியை அதிகரித்த இலங்கையின் உறுதிப்பாடு பாராட்டத்தக்க ஒன்றே

## சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் புகழாரம்



பொருளாதார மறு மலர்ச்சிக்கான மறுசீர மைப்புக்களை விரைவு படுத்துவதிலும் கடினம ான காலங்களில் வரி அதி கரிப்பை அமுல்படுத்து வதிலும் இலங்கை கொண் டுள்ள உறுதிப்பாடு மிகவும் பாராட்டத்தக்கது என சர்வதேச நாணய நிதியத் தின் நிறைவேற்று பணிப் பாளர் கலாநிதி கிருஷ்ண மூர்த்தி சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிவாரண சலுகைக்காக இலங்கை நிறைவேற்ற வேண்டிய அனைத்து விடயங்களையும் நிறைவேற் றியுள்ளதாகவும் கடன் வழங்கும் பிரதான நாடுகளின் இறுதிச் சான்றிதழின் பின்னர் அது தொடர்பான செயன்முறைகள் நிறைவடையும் எனவும் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் பிரதமரிடம் தெரி வித்துள்ளார்.

நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் வகையில், ஏற்றுமதி க்கான விவசாய உற்பத்திகளை அதிகரிக்க அர சாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன் போது பிரதமரால் தெளிவுபடுத்தப்பட்டுள் ளது.

கடனை மறுசீரமைக்கவும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் திட்டங்களை உருவாக்கும் போது பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படக்கூடிய தரப்பின ருக்கான ஒரு பாதுகாப்பு வலயம் அவசியமென கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், ஆகக் குறைந்து அரச துறையில் ஊதியத்துக்கான உத்தரவாதம் அளிக் கப்பட்டிருந்தாலும், பலர் தங்கள் வருமான மார்க் கங்களை இழந்துள்ளதால், பொதுத்துறையினர் தியா கம் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, சர்வதேச நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளரான மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர, பணிப்பாளர் கலா நிதி பி. கே. ஜி. ஹரிச்சந்திர மற்றும் மத்திய வங்கி யின் பொருளாதார ஆய்வுத் துறைப் பிரதிப் பணிப் பாளர் கலாநிதி வி. டி. விக்கிரமாராச்சி ஆகியோ ரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட னர்.

# விசேட போக்குவரத்துகள் திட்டம் கொழும்பில் அமுல்!

சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி நேற்று (சனிக்கிழமை) முதல் காலி முகத்துவாரம் மற்றும் கொழும்பில் உள்ள பல வீதி களில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த விசேட போக்குவரத்து திட்டம் இன்று ,நாளை மற்றும் பெப்ரவரி 1, 2, 3 மற்றும் 4 ஆம் திகதி வரையில் காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை அமுலில் இருக்கும் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# கோப்பாய் குடும்பஸ்தர் படுகொலை: மனைவி உள்ளிட்ட 11 பேர் கைது!

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் குடும்பத் தலைவரை வெட்டி படுகொலை செய்த குற்றச்சாட்டில், அவரின் மனைவி, மாமனார்(மனைவியின் தந்தை) உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் மத்தி பகுதியில் மோட்டார் சைக்கிள் திருத்தகம் (கராஜ்) நடத்தி வந்த ஒரு பிள்ளையின் தந்தையான அஜித் என்பவர் கடந்த 21 ஆம் திகதி இரவு தனது கராஜில் இருந்து வீடு திரும்பிக்கொண் டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் ஒன்று அவரை வழிமறித்து தாக்கியுள்ளது.

தாக்குதலாளிகளிடம் இருந்து அவர் தப்பியோடிய போது, அவரை வீடு வரை துரத்தி சென்று, வீட்டு வாசலில் வைத்து மூர்க்கத்தனமாக வெட்டி படு கொலை செய்த பின்னர் அங்கிருந்து தப்பி சென்று இருந்தனர்.


மேற்படி படுகொலை சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரால், முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், கொலையான நபரின் குடும்பத்தில் முரண்பாடுகள் நிலவி வந்ததாகவும், அதனால் அவர் குடும்பத்தை விட்டு பிரிந்து தனது வாகன திருத்தகத்தில் (கராஜ்) தங்கி இருந்துள்ளார் எனவும் தெரிய வந்திருந்தது.

அதன் அடிப்படையில் தாம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த போது, கொலையா னவரின் மனைவியும், மாமனாருமாக இணைந்து திட்டம் தீட்டி வேறு நபர்கள் மூலம் குறித்த நபரை படுகொலை செய்துள்ளனர் என கண்டறிந்த நிலையில் , மனைவி, மனைவியின் தந்தை உள் ளிட்ட 11 பேரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 11 பேரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இந்தியா துரிதமாக செயற்பட்டிருக்காவிட்டால் மோசமான சமூக விளைவுகள் ஏற்பட்டிருக்கும்!

## மிலிந்த மொறகொட சுட்டிக்காட்டு



இந்தியா துரிதமாக செயற்பட்டிருக் காவிட்டால் இலங்கையின் பொருளா தார நெருக்கடி மோசமான சமூக விளைவு களை ஏற்படுத்தியிருக்கும் என இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொராகொட தெரி வித்துள்ளார்.

டைம்ஸ் ஒவ் இந்தியாவிற்கு வழங் கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

இலங்கையின் கடன்மறுசீரமைப் பிற் கான இந்தியாவின் உதவி மற்றும் சர்வதேச நாணயநிதியத்துக்கு இந்தி யா வழங்கியுள்ள நிதி உத்தரவாதங்கள் தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள அவர், இந்தியாவின் உதவிகள், ஆதர வுகள் இரு நாடுகளுக்கும் இடையிலான நம்பிக்கையில் காணப்படும் இடை வெளியை மேலும் குறைக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

வேறு எந்த நாட்டினாலும் இந்தியா போன்று இலங்கைக்கு உதவியிருக்க முடியாது எனத் தெரிவித்துள்ள மிலிந்த மொராகொட, கடந்த 22 மாதங்களில் மூன்று தடவையாக இந்திய வெளிவிவ கார அமைச்சர் ஜெய்சங்கர் இலங் கைக்கு விஜயம் மேற்கொண்டுள் ளமை- அவரது சமீபத்தைய விஜயம் இரு நாடுகளினதும் இருதரப்பு உறவு கள் புதிய கட்டத்தில் நுழைவதைக் குறிக்கும் விதத்தில் அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது இலங்கையின் பொருளாதார மீட்சியின் ஆரம்பத்தைக் குறித்து நிற்கின்றது எனவும் மிலிந்தமொரா கொட தெரிவித்துள்ளார்.

# கடலாமையுடன் 2 பேர் மன்னார் கீரியில் கைது!



மன்னார்–கீரி பகுதியில் இறைச் சிக்காக கொண்டு சென்ற கடலாமையுடன் வெள்ளிக்கிழமை மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் 2 நபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர் கள் கீரி பகுதியைச் சேர்ந்த 50 மற்றும் 55 வயது டையவர்கள் என மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புல னாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிருடன் மீட்கப்பட்ட கடலாமை 35 கிலோ எடை கொண்டது எனத் தெரிய வருகிறது.

மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் துல்சான் நாகாவத்தவின் பணிப்புரைக்கு அமைவாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் (2) அரியரட்ண பண்டார மற்றும் மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரி சோதகர் ஆனந்த ரட்ணாயக்க தலை மையில், பொலிஸ் சாஜன் ரத்நாயக்க மற்றும் உத்தியோகத்தர்கள் சென்று குறித்த கடலாமை யை உயிருடன் மீட்டதோடு, இரு நபர்களையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் மீட்கப்பட்ட கடலாமை மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கைகளை முன் னெடுத்துள்ளனர்

# தேசபந்து தென்னகோனுக்கு எதிரான நடவடிக்கை சட்டமாதிபர் திணைக்களமூடாக முன்னெடுக்கப்படும்!

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் தெரிவிப்பு



மே 09 காலி முகத்திடல் போராட்ட களம் மீதான தாக்குதல் விவகாரம் தொடர்பில் மேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராகக் குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த விசாரணை, அமைச்சு மட்டத்தில் முன்னெத்த ஒழுக்காற்று விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்தகட்ட நடவடிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

தொழிலதிபர் தினேஸ் ஙப்டரின் மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பான விசாரணை அறிக்கை இன்னும் இரு வார காலத்துக்குள் பகிரங்கப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவிற்கு எதிராக ஆறு மாத காலத்துக்குள் ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுத்து, அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவிற்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது, ஆறு மாத காலத்துக்குள் அறிக்கை உயர்நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய செயற்படுவோம்.

மே 09 காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் மீது முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் தொடர்பில் மேல்மாகாண பிரதி பொலிஸ்மா தேசபந்து தொன்னகோன் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்தத் தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணை அறிக்கை மற்றும் பொது மக்கள் அமைச்சு மட்டத்தில் அவருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையின் அறிக்கை சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜுலை 09 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றிய போராட்டகார்கள் ஜனாதிபதி மாளிகையில் இருந்த கோடிக்கணக்கிலான பணத்தை பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பித்த விடயம், அதனுடன் தேசபந்து தென்னகோன் தொடர்புப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த விடயம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் அந்த விடயம் தொடர்பான விடயங்களைக் குறிப்பிட முடியாது.

தொழிலதிபர் தினேஷ் சாப்டரின் மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பான விசாரணை அறிக்கை இன்னும் இருவார காலத்துக்குள் பகிரங்கப்படுத்தப்படும். – என்றார்.




# ஜே.வி.பியின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தினால் ஆர்ஜன்டீனா போன்ற நிலைமையே இலங்கைக்கு ஏற்படும்!

## ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை



ஜே.வி.பி. கூறுவதைப் போன்று சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளை இடைநிறுத்தினால் ஆர்ஜன்டினாவை போன்ற நிலைமையே இலங்கைக்கும் ஏற்படும். அத்தோடு நட்பு நாடுகளான சீனா மற்றும் இந்தியாவிடமிருந்து கூட கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை என்று ஜே.வி.பி. கூறுகின்றது. அவ்வாறெனில், அதற்கான மாற்றுவழி என்ன என்பதையும் அவர்கள் முன்வைக்க வேண்டும்.

அதனை விடுத்து குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளை இடைநிறுத்தினால் ஆர்க்ஜன்டினாவுக்கு ஏற்பட்ட நிலைமையே இலங்கைக்கும் ஏற்படும். சர்வதேச நாணய நிதியத்துடன் இறுதி இணக் கப்பாடு எட்டப்படாவிட்டால், இலங்கை கடன் நிலைபேற்றுத் தன்மையற்ற நாடாக கருதப் படும்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால், நட்பு நாடுகளாகக் காணப்படுகின்ற போதிலும், இந்தியா மற்றும் சீனாவிடமிருந்து கூட எம்மால் ஒத்துழைப்புக்களைப் பெற முடியாது. சட்ட ரீதியாக அந்த நாடுகளுக்கு எம்மால் உதவ முடியாது. எனவே, கடன் நிலைபேற்றுத் தன்மையை பேணுவதற்கு அதற்குரிய பொருளாதார வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதன் அடிப்படையிலேயே சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டதோடு, வரவு – செலவுத் திட்டமும் முன்வைக்கப்பட்டது. இதனை அடிப்படையாக கொண்டே இந்தியாவும் கடன் மறுசீரமைப்புக்கு எழுத்து மூலம் இணக்கம் தெரிவித்தது.

நாணய நிதியத்தை நாட வேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்ற போதிலும், அவர்களின் சகல நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும் என்று கூறவில்லை. உதாரணமாக, வருமான வரி 38 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளமையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கான மாற்று வேலைத்திட்டம் எம்மிடமுள் ளது. எமது ஆட்சியில் நிச்சயம் இதில் திருத்தங் கள் மேற்கொள்ளப்படும்.

கடந்த 2020ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிகள் ஆரம்பமானபோதே சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்றிருந்தால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்காது. – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ரி20 மகளிர் உலகக் கோப்பை

# இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது இந்தியா

19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் உலகக் கோப்பை ரி20 கிரிக்கெட் போட்டி இறுதிச் சுற்றுக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது. தென்னாப்பிரிக்காவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரையிறுதியில் நியூஸி.யை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது இந்தியா.

தென்னாப்பிரிக்காவின் போர்ட்செஃப்ஸ்ட்ரூம் நகரில் மகளிர் ரி20 உலகக் கோப்பை போட்டி நடைபெற்றுவருகிறது. முதல் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா-நியூஸிலாந்து அணிகள் மோதின. டாஸ் வென்ற இந்தியா பந்துவீச்சைத் தேவு செய்தது.

இதையடுத்து களமிறங்கிய நியூஸி அணியால், இந்தியாவின் அபார பந்துவீச்சைச் சமாளிக்க முடியவில்லை. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவாகளில் 107/9 ஓட்டங்களையே எடுத்தது நியூஸி. அதிகபட்சமாக பிளிம்மா 35, இஸபெல்லா கேஸ் 26 ஓட்டங்களை எடுத்தனா.

இந்திய பந்துவீச்சாளர் பாவி சோப்ரா அற்புதமாக பந்துவீசி 3/20 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆட்ட நாயகி பட்டத்தையும் கைப்பற்றினார்.

108 ஓட்டங்கள் என்ற எளிய வெற்றி இலக்குடன் இந்திய தரப்பில் கேப்டன் ஃபாலி வாமா-ஸ்வேதா செஹ்ராவத் தொடக்க துடுப்பாளர்களாகக் களம் கண்டனா. 10 ஓட்டங்களுடன் பாலி வெளியேறினார். அதன் பின் ஸ்வேதா-சௌமியா திவாரி இணை அற்புதமாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை உயாத்தியது.

அபாரமாக ஆடிய ஸ்வேதா 10 பவுண்டரியுடன் 45 பந்துகளில் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். சௌமியா 22 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். த்ரிா 5 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். 14.2 ஓவாகளிலேயே 110/2 ஓட்டகளை எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் நியூஸி.யை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கும் தகுதி பெற்றது இந்தியா.

நியூஸி. தரப்பில் அன்னா பிரௌனிங் 2 விக்கெட்டை வீழ்த்தினார்.





# ஹாக்கி உலக கோப்பை இறுதியில் ஜெர்மனி - பெல்ஜியம் மோதல்

எஃப்ஐஎச் உலகக் கோப்பை ஆடவா ஹாக்கிப் போட்டி இறுதிச் சுற்றில் ஜொமனி-பெல்ஜிய அணிகள் மோதுகின்றன.

இந்தியாவின் புவனேசுவரத்தில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற பரபரப்பான முதல் அரையிறுதியில் உலகின் நம்பா 1 அணியான ஆஸ்திரேலியாவை 4-3 என வீழ்த்தியது ஜொமனி. இரண்டாவது அரையிறுதியில் நெதாலாந்தை 3-2 என பெல்ஜியம் வீழ்த்தியது.

மூன்று முறை சாம்பியன் ஆஸி.யுடன்-இரு முறை சாம்பியன் ஜொமனி தொடக்கம் முதலே ஈடுகொடுத்து ஆடியது. ஆட்டம் தொடங்கியவுடன் ஆஸி. அணி வீராகள் ஜெரேமி ஹேவாட் 12, நாதன் எஃப்ராம்ஸ் 27ஆவது நிமிஙகளில் அபாரமாக கோலடித்தனா. இதனால் 2-0 என ஆஸி. முன்னிலை பெற்றது.

பெய்லட் ஹாட்ரிக்: இரண்டாம் பாதியில் ஜொமனி வீராகள் ஆக்ரோமாக ஆடிய நிலையில், அதன் நட்சத்திர வீரா கோன்ஸாலோ பெய்லட் 43, 52, 59ஆவது நிமிடங்களில் பெனால்டி காா்னா வாய்ப்புகளை பயன்படுத்தி அற்புதமாக ஹாட்ரிக் கோலடித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த ஆஸி அணி தனது ஆட்டத்தை தீவிரப்படுத்தியதன் பயனாக 58ஆவது நிமிடத்தில் பிளேக் குரோவாஸ் கோலடித்தார். 3-3 என சமநிலையில் இருந்த நிலையில், ஆட்டம் முடியப்போகும் கடைசி 60ஆவது நிமிடத்தில் ஜொமனி வீரா நிக்கிலாஸ் வெல்லென் அற்புதமாக கோலடித்து தனது அணி 4-3 என வெல்ல உதவினார்.

இங்கிலாந்துக்கு எதிராகவும் 0-2 என பின்தங்கி பின் வென்ற, ஜொமனி, தற்போது இரண்டாவது முறையாக 0-2 என பின்தங்கி இருந்து வென்றுள்ளது.

13 ஆண்டுகளுக்கு பின் இறுதிச் சுற்றில் நுழைந்துள்ளது ஜொமனி. டோக்கியோ ஒலிம்பிக் அரையிறுதியில் தோற்றக்கு தற்போது ஆஸி.யை பழி தீர்த்துக் கொண்டது.

இரண்டாவது அரையிறுதியில் நெதாலாந்து-நடப்பு சாம்பியன் பெல்ஜியம் மோதின. ஆட்டநேர முடிவில் 2-2 என சமநிலை ஏற்பட்டது.

இதையடுத்து பெனால்டி ஷுட் அவுட் கடைபிடிக்கப்பட்டது. இதில் 3-2 என்ற கோல் கணக்கில் நடப்பு சாம்பியன் பெல்ஜியம் வென்று இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது.

நடப்பு சாம்பியன் பெல்ஜியம்-ஜொமனி இடையே இறுதி ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. வெண்கல பதக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியா-நெதாலாந்து மோதுகின்றன.

# ரி20 முதல் ஆட்டத்தை வசப்படுத்தியது நியூஸி.

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி20 தொடரின் முதல் ஆட்டத்தில் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது நியூஸிலாந்து.

ஒருநாள் தொடரை இந்தியாவிடம் முழுவதுமாக இழந்த நிலையில் நியூஸிலாந்து அணிக்கு இந்த வெற்றி ஊக்கமளித்துள்ளது.

முதலில் ஆடிய நியூஸி. 176/6 ஓட்டங்களை குவித்தது. இரண்டாவதாக ஆடிய இந்திய அணி 155/9 ஓட்டங்களை மட்டுமே சோத்தது.

இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் ராஞ்சியில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய பந்துவீச்சைத் தேவு செய்தது. இதைத் தொடாந்து களமிறங்கிய நியூஸி. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவாகளில் 176/6 ஓட்டங்களைக் குவித்தது.

**கான்வே-டேரில் மிச்செல் அரைசதம்:**

டேவன் கான்வே 52 ஓட்டங்களுடன் (1 சிக்ஸா, 7 பவுண்டரி) தனது 9ஆவது அரைசதத்தைப் பதிவு செய்தார். ஆல் ரவுண்டா டேரில் மிச்செல் 5 சிக்ஸா, 3 பவுண்டரியுடன் 59 ஓட்டங்களை விளாசி இறுதி வரை களத்தில் இருந்தார். தொடக்க துடுப்பாட்டக்காரர் ஃபின் ஆலன் 35 ஓட்டங்களைச் சோத்தார்.

மற்ற வீராகள் சொற்ப ஓட்டங்களுடன் நடையைக் கட்டினா. இந்திய தரப்பில் வோஷிங்டன் சுந்தா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**விக்கெட்டுகளை இழந்த இந்தியா:**

177 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி தொடக்கத்திலேயே தடுமாறி வெறும் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்தது. கில் 7, இஷான் கிஷ் 4, ராகுல் திரிபாதி 0 என்று வந்த வேகத்திலேயே திரும்பினா.

சூரியகுமாா யாதவும்-கேப்டன் ஹார்திக் பாண்டியாவும் இணைந்து ஓட்டங்களை உயாத்தினா. சூரியகுமாா தனது வழக்கமான பாணியில் அடித்து ஆடினார். 2 சிக்ஸா, 6 பவுண்டரியுடன் 47 ரன்களை எடுத்து அவா வெளியேறினார். தலைவா் பாண்டியா 21 ஓட்டங்களுடன் வெளியேறினார். அப்போது 89/5 ரன்களுடன் திணறிக் கொண்டிருந்தது இந்தியா.

**கைகொடுத்த வாஷிங்டன் சுந்தா:**

சகலதுறை ஆட்டக்காரரான வாஷிங்டன் சுந்தா அதிரடியாக ஆடி அரைசதம் அடித்தார். 3 சிக்ஸா, 5 பவுண்டரியுடன் 28 பந்துகளில் 50 ஓட்டங்களை விளாசினாா சுந்தா. மற்ற வீராகள் சொற்ப ஓட்டங்களுக்கு வெளியேறினா. 20 ஓவாகளில் 155/9 ரன்களை மட்டுமே சோத்த இந்திய அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. நியூஸி. தரப்பில் பிரேஸ்வெல் 2-31, சான்ட்னா 2-11, பொகுஸன் 2-33 விக்கெட்டுகளை வீழ்த்தினா.

# இங்கிலாந்தை வீழ்த்தி தென்னாபிரிக்க வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் ஆட்டத்தில் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அந்த அணியை வீழ்த்தியது தென்னாப்பிரிக்க அணி. இங்கிலாந்து அணி தென்னாப்பிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்து 3 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடிகிறது.

புளூம்ஃபாண்டேனில் நடைபெற்ற முதல் ஒருநாள் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாப்பிரிக்க அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

அந்த அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 298 ஓட்டங்கள் எடுத்தது. வான் டர் டுசென் 111 ஓட்டங்கள் எடுத்து அணிக்குப் பெரிதும் உதவினார். மில்லர் 53 ஓட்டங்கள் எடுத்தார். சாம் கரண் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இங்கிலாந்து அணிக்கு அருமையான தொடக்கம் கிடைத்தது. முதல் விக்கெட்டுக்கு ஜேசன் ராயும் டேவிட் மலானும் 19.3 ஓவர்களில் 146 ரன்கள் எடுத்தார்கள். ஆனால் மலான் 59 ஓட்டகளுக்கு ஆட்டமிழந்தது திருப்புமுனையாக அமைந்தது. ஜேசன் ராய் 113 ஓட்டங்கள் எடுத்தாலும் ஏனைய துடுப்பாளர்களால் 36 ஓட்டங்களைத் தாண்ட முடியவில்லை. இதனால் இங்கிலாந்து அணி 44.2 ஓவர்களில் 271 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 27 ரன்கள் வித்தியாசத்தில் தோல்விய டைந்தது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2023 இல் வெளியிடப்பெற்றது.